ஸ்ரீ குமரகுருபரர்



402
13.10.87

தொகுதி - 10 பகுதி - 1

ஐப்பசி - 1 18—10—87

நமரங்காள்!

வேத்தவை காவார் மிகன்மக்கள்; வேறுசிலர்
காத்தது கொண்டாங் குகப்பெய்தார் — மாத்தகைய
அந்தப் புரத்தது பூனை; புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

கட்டுத்தறியை முறிக்கும் இயல்பையுடையதான யானையானது அரசவைக்கும் அரண்மனைக்கும் வெளியேதான் இருக்கும். அதுபோலக் கல்வி அறிவு ஒழுக்கத்தில் மேம்பட்டவர் அரசவைக்குள் எதிர்பார்த்துக் கிடக்க மாட்டார்கள். (ஆனால் அரசனுக்கு ஆபத்தான காலத்தில் முன் வந்து உதவுவர்.) பூனையானது பெருமையுள்ள அந்தப் புரத்தில் வாழும். அது போல அறிவொழுக்கமில்லாதவர்கள் அரசவையில் ஏதாவது கிடைக்குமா என்று எதிர்பார்த்து அது கிடைத்த போதும் பெருமையடைய மாட்டார்கள்.

ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்.

சிறப்பாசிரியர்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணைசலம்
செந்தமிழ்க் கலாநிதி
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை. திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 பெருமான் புகழ்
2 ஸ்ரீ குமரகுருபரர்நெறிவிளக்கம்
3 செந்தமிழ்க் கலாநிதிக்குப் பாராட்டு
4 ஸ்ரீ குமரகுருபரர் — 300
5 ஆலயபூஜைப் படிக்காசுநிதி
6 இராசராசன்கால இலக்கியங்கள்
7 இராசராச சோழனின் சைவசமயத் தொண்டு
8 தஞ்சை இராசராசேச்சரத்து ஓவியங்கள்
9 நூல் நிறை
10 திருச்சதகமும் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியும்
11 சீர்வளம் பெருக
12 ஆன்மாவேறு - உயிர்வேறு

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.

402
13/10/87

பெருமான் புகழ்

2354

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
"கயிலைமாமுனிவர்" ஸ்ரீ ல ஸ்ரீ

காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

நல்லகாரியம் எதனையும் நினைத்தவுடன் நிறைவேற்றிட வேண்டும். நாளைக்குச் செய்யலாம் என்று ஒத்திப்போடக் கூடாது. நாளை என்பது நம்கையில் இல்லை. நாளை என்பது மட்டுமன்று; பின்னே என்பதுகூட காரியத்தைக் குலைக்கும் கருவிதான்.

> வாதக்கோன் நாளைஎன்றான் மற்றைக்கோன் பின்னைஎன்றான்
> ஏதக்கோன் ஏதேனும் இல்லைஎன்றான் — ஓதக்கேள்
> வாதக்கோன் சொன்னதினும் மற்றைக்கோன் சொன்னதினும்
> ஏதக்கோன் சொல்லே இனிது.

என்பது ஔவை வாக்கு. தனிப்பாடல் பாடிய ஔவை நாளை என்பதும் பின்னை என்பதும் நடவாது என்பதைக் கூறக் கற்பனையாகப் பாடிய பாடலிது.

'சிவபெருமானின் திருவடிகளை உடனே போற்றுங்கள்' என்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிதம்பரச் செய்யுட் கோவையின் 26 ஆம் பனுவலில் மன்பதைகளைத் துரிதப்

படுத்துகிறார். 'பிரதோஷம் வரும்போது' திருவாதிரை வரும்போது, சிவராத்திரி வரும்போது சிவபெருமான் திருவடிகளை மனமுருகிப் போற்றுகின்றேன், இப்பொழுது அவசரமில்லை' என்று ஸ்ரீ சுவாமிகளுக்கு நாம் விடை சொல்லலாம் அல்லது 'இது பகல்வேளை. சந்தியாகாலம் வரட்டும் கோயிலுக்குச் சென்று பொன்மன்றுடியின் பொற்றுளிணைகளைத் தொழுது தூமலர் தூவித்துதித்து வருவேன்' என்றும் சொல்லலாம். ஸ்ரீ சுவாமிகள் இப்படியெல்லாம் சாமனியர்கள் சொல்வார்கள் என்று அறிந்துதான், 'இயமன் எடுத்துச்செல்ல வருவதற்குமுன் சிவபெருமான் திருவடிகளைப் போற்றுங்கள்' என்றருளினார்கள். அவன் என்று வருவான் எப்பொழுது வருவான் என்று யாருக்குத் தெரியும்? மரணம் என்பது உடல்நலமின்மை நலம் என்ற நிலைமைகளால் உறுதிசெய்து உரைப்பதும் அல்லவே! 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யென்னும் பெருமை' தானே உலகத்தின் பெரும் பெருமை. 'பின்றையே நின்றது கூற்றம் என்றெண்ணி ஒருவுமின் தீயவை' என முன்னோர் உரைத்த முதுமொழி யாவும் இவ்வுண்மையால் அல்லவா?

இப்படிச் சொல்வதைக் கேட்டுச் சில பக்குவப்படாத ஆய்வுள்ளங்கள் 'சமயவாதிகள் யமபயத்தை முன்வைத்து அச்சுறுத்திதம் வழிக்குத் திருப்புகிறார்களோ' என நினைப்பது உண்டு.

'அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும் நெஞ்சம் நீநினை' என்ற அருள் வாக்குப்படி அஞ்சித் தொழுதாலும் பலன் உண்டு. 'பயபக்தி' என்பார்கள். பயத்தின் பின்னேதான் பக்திவரும்.

பயமுறுத்துவது அருளாளர்களின் நோக்கமன்று. யமபயம் எல்லோருக்கும் வந்தேதீரும். 'அஞ்சுவது யாதொன்றுமில்லை' என்று அப்பரடிகளும் 'மரணப்பிரமாதம் நமக்கில்லை' என்று அருணகிரியாரும் அறிவித்தருளுவது போன்ற திண்மையை வருவிப்பதற்காகவே அருளாளர்கள் 'யமன் வருமுன் இறையடி தொழுக' என்றனர். இவ்வுண

மையை ஸ்ரீ சுவாமிகள் இத்திருப்பாடலில் சற்று விரிவாகவே கூறியருளியுள்ளார்கள் எனலாம்.

'ஏற்றுவந்தான் பொற்றுள் இணை கூற்றம் குமைக்க வருமுன் போற்றுமின்' என்றருளினுர்கள். 'கூற்றம் குமைக்க வருமுன் ஏற்றுவந்தானைப் போற்று' என்றுலே அமையும். 'பொற்றுளிணை போற்று' என்றதில்தான் மேற்கூறிய உண்மை பொதிந்திருக்கிறது. அப்பொற்றுள்கள் கூற்றை உதைத்த பொற்றுள்கள். உதைத்த பொற்றுள்களை உள்ளத்தில் கொண்டவனிடம் உதைபட்டவன் வருவானு? எனவே அச்சந்தவிர்த்தற்கே இஃது அறிவித்தது. சிதம்பரச் செய்யுட் கோவையின் எட்டாம் திருப்பாடலாகிய

'கூற்றம் குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றம் துடைத்தேம் துடைத்தேமால் — சீற்றம்செய்
ஏற்றினுன் தில்லை இடத்தினுன் என்இனியாம்
போற்றினு னல்கும் பொருள்'

என்னும் பாடலுடன் பொருள் தொடர்ச்சிபெற்ற பாடலே

போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றம் குமைக்க வருமுன் நமரங்காள்
ஏற்றுவந்தாள் பொற்று ளிணை.

என்னுமித் திருப்பாடலாகும்.

எட்டாம் பாடல் கடவூர்ப் பெருமான் காலனைக் காலால் உதைத்தது கூறியது. அப்பாடலுள் குமைத்த என்னும் சொல்லுக்கு 'அடக்க' என்பது பொருள். 26-ஆம் பாடலுள் குமைக்க என்னும் சொல்லுக்கு 'அடர்க்க' என்பதுபொருள். அடக்கல் என்பது செயலறுத்தல். அடர்த்தலாவது நசுக்குதல், அல்லது நெரிவித்தல்.

பூண்தங்கு மார்பின் இலங்கை வேந்தன்
பொன்னெடுந் தோள் வரையாலடர்த்து
(சம்பந்தர் செங்காட்டங்குடி-8)

என்றது

தென்னிலங்கை யரையன் வரைபற்றி
எடுத்தான் முடிதிண்டோள்
தன்னிலங்கு விரலால் நெரிவித்து.

(சம்பந்தர் திருப்புகலூர்—8)

என்ற பொருள்தாதல் ஒப்புநோக்கியுணரலாம்.

சிதம்பரச் செய்யுட்கோவையின் 8, 26 ஆம் பாடல்களை ஒருங்கு காணும்போது சிவன் யமனை அடக்குதலையும், யமன் மன்பதைகளை நசுக்குதலையும் உணரலாம். ஒரே சொல்லால் இருவேறு செயல்களை உணரவைத்த ஸ்ரீ சுவாமிகள் பாட்டுத்திறம் நினைந்து வியத்தற்குரியதாகும்.

இத்திருப்பாடலுள் 'போற்றுமின்' என்ற சொல்லை நான்கு முறை அடுக்கியுள்ளார்.

"போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்"

என்பது முதலடி, தொல்காப்பிய எச்சவியலுள்

"இசைப்படு பொருளே நான்கு வரம்பாகும்" (423)"

"விரை சொல் லடுக்கே மூன்று வரம்பாகும்" (424)

என இரு நூற்பாக்கள் உள்ளன.

"இசைப்பொருளாவது செய்யுளின்பம்
விரைவிக்கும் சொல்லடுக்கை விரைசொல் என்றார்"

என்ற விளக்கத்தின்பேரில்

"பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" என்றும்
"தீத்தீத்தீ" என்றும் வரும்.

எனச் சேனாவரையர் காட்டுக்கள் நல்கினார்.

ஸ்ரீ சுவாமிகள் அருளிய 'போற்றுமின்' என்ற அடுக்கு செய்யுளின்பத்திற்கு அடுக்கியதெனில் நான்குவரம்பாயது முறைமையே. இதனை இசைச் சொல் அடுக்காகக் கோடல் எவ்வாற்றானும் பொருந்தாது.

'கூற்றம் குமைக்க வருமுன் போற்றுமின்'

என்றதனால் இவ்வடுக்கு விரைசொல் அடுக்கேயாகும். விரைசொல்லடுக்காதலின் மூன்று வரம்பாகப்,

"போற்றுமின் போற்றுமின் போற்றுமின் இன்னேயக்
கூற்றம் குமைக்க வருமுன் நமரங்காள்
ஏற்றுவந்தான் பொற்று ளிணை"

எனச் செய்ய அறியாரல்லர். ஓதாதுணர்ந்த பெருஞானிகளாகிய ஸ்ரீ சுவாமிகள் விரைசொல்லடுக்கு மூன்று வரம்பாயது என்பதும் அறியாரல்லர். பின்னூலாகிய நன்னூலாரும்,

'அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்'

என்றூர். இதன்கண் பொருள் நிலையென்பது, விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் இவை முதலாயின எனக்கூறினர் சங்கர நமச்சிவாயர். விரைவுக்கு உண்டேன், உண்டேன், போ, போ, போ என இரண்டுமுறை மூன்று முறையடுக்கியதாகக் காட்டுக்கள் நல்கினர்.

இவ்வாற்றான் விரை சொல்லடுக்காகிய போற்றுமின் என்பது மும்முறையே அடுக்க உரியதாகிறது. ஸ்ரீ சுவாமிகள் நாற்றிசை மாந்தரையும், நானில மக்களையும் போற்றுமின் என அழைத்தார்கள். எனவே போற்றுமின் என நான்கு முறையடுக்கினர்கள். நான்கு திசையினரையும் நம்மவர் எனக் கொள்வதே ஞானியர் வழக்கு. எனவே விரை சொல்லடுக்கை நான்கு வரம்பாக ஒரு காரணத்தால் புத்திலக்கணமாக ஸ்ரீ சுவாமிகள் நிறுமித்த இடம் இது எனக் கண்டு மகிழ்தல் வேண்டும். ஞானியர் நாற்றிசை மாந்தருக்கும் அறிவுறுத்தும் விரைவுப்பொருட்கள் இவ்வண்ணம் நான்கு வரம்பாக அடுக்கும் என்பது கொள்ளத் தக்க குறிப்பாகும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவர்கட்கே உரிய முத்திரைச்சொல் நமரங்காள் எனும் விளியாகும். இதனை அவர் தாமே வலியுறுத்தும்பொருட்டே

> நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
> நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் — நீரில்
> எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
> வழுத்தாத தெம்பிரான் மன்று.

என்னும் திருப்பாட்டை நீதிநெறி விளக்கத்தின் தலைச் செய்யுளாகவும், சிதம்பரச் செய்யுட் கோவையின் 9 ஆம் பனுவலாகவும் அமைத்தருளினர்கள். இவ்வகையான் நமரங்காள் என்னும் விளியுடைய மூன்று பனுவல்களும் சிதம்பரச் செய்யுட் கோவையுள்ளேயே உளதாகிறது. மேற் காணும் 9 ஆம் பாடலும் இக்கட்டுரையின்கண் ஆராயப் பெறும் 26 ஆம் பாடலும்

> வெஞ்சம னஞ்ச வேலொ டெதிர்ந்தால் நமரங்காள்
> அஞ்ச லெனுஞ்சொல் ஆர்சொல வல்லார் நமரங்காள்
> மஞ்சிவ ரிஞ்சி மன்ற மிறைஞ்சீர் நமரங்காள்.
> நஞ்ச மயின்றார் நல்குவர் மாதோ நமரங்காள்.

என்னும் சிதம்பரச் செய்யுட் கோவையின் 40 ஆம் பாடலும் அவை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் இம் மூன்று திருப்பாடல் களிலும் நிலையாமை கூறுகிறார்கள். இறை வழிபாட்டை வற்புறுத்துகிறார்கள்.

சிதம்பரச் செய்யுட் கோவையிலேயே 'நமரங்காள்' எனும் விளியைப் பயில அமைந்தமையான் செய்யுட் செய்வோர் உலகவரை இவ்வண்ணம் காணல் வேண்டுமெனக் கூறினராகிறார். நம்மவர்கட்குச் சொல்லத்தகுவன நிலையாமையும், இறை வழிபாடும்; உய்திறன் அதுவே எனலுமே என்பதும் இவ்வாற்றான் கூறினரர்கிறார்.

போற்றுமின் என்னும் திருப்பாடலுள் ஏற்றுஉவந்தான் என வந்தமை செய்யுள் விகாரம். ஏற்றின்கண் உவந்தான் எனத் தொகையாகக் கொள்ளினும் அமையும்.

போற்றுமின் எனத்தொடங்கும் இத்திருப் பாடலை யொட்டிக் கீழ்க்காணும் செய்யுளிலக்கணக்குறிப்பு உள்ளது.

"இது தனிச் சொல் இன்றி மூன்றடியால் ஒருவிகற்பத் தான்வந்த ஒருவிகற்பதது இன்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் ஒருசொல்லே வரத் தொடுத்த மையால் இரட்டைத்தொடை."

மூன்றடியான் வெண்பாவின் சீர்தளை பொருந்தியமை யான் சிந்தியல் வெண்பாவாகிறது. 'தனிச்சொல் இன்றி நடப்பின் அஃது இன்னிசை' என்றபடி தனிச்சொல் இன்மை யால் இன்னிசைச் சிந்தியல் வெண்பா ஆகிறது.

போற், கூற், ஏற்—என ஒரெதுகையே பெற்றமையான் ஒரு விகற்பமுடையதாகிறது. எனவே ஒரு விகற்ப இன் னிசைச் சிந்தியல் வெண்பா என இப்பாடல் குறிக்கப் பெறுகிறது.

'அடிமுழுதும் வந்த மொழியே வருவது இரட்டை' என்பது இரட்டைத் தொடைக்குரிய இலக்கணமாகும்.

"ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சீரெரி ஒக்குமே ஒக்கும்
குளக் கொட்டிப் பூவின் நிறம்"

என அதற்குக் குணசாகரர் உதாரணம் காட்டுகிறார். இப் பாடலுள்

"போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்"

என அடிமுழுதும் வந்தமொழியே வருவதால் இரட்டைத் தொடை எனல் பொருந்தும் எனினும் இரட்டைத் தொடைக் குரிய உதாரணச் செய்யுட்கள் அனைத்தும் இசைநிறை அடுக்காகவே யாண்டும் காணப்பெறுகின்றன. அவ்வகை யின் நான்கு வரம்பாக அடுக்கிய நிலை புதுமையின்றி விளங்கின. போற்றுமின் என்ற பாட்டுள் அவ்வடுக்கு விரைசொல்லடுக்காக வந்த இரட்டைத் தொடையானமை யால் முன்னர்க் கூறிய விளக்கம் தேவையாகிறது.

— சிவ சிவ.

வாழ்க்கை
நெருப்பில் விழுந்த விறகு ஆகலாமா?

நெல்லை சிவமணி புலவர் ம. சிவசம்பு எம். ஏ.,
பாளையங்கோட்டை

"எவ்வளவு சம்பாதித்தாலும் போதவில்லை. கடன் வாங்க வேண்டியிருக்கிறது" என்றார் நண்பர். பலரும் ஆமோதித்தனர். அங்கிருந்த நண்பரில் ஒருவர் மட்டும் எதுவும் சொல்லாமல் இருந்தார். எல்லோரும் போனபின் நீர் மட்டும் ஒன்றும சொல்லவில்லையே என்றேன். நான் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? இவர்கள் வாழத் தெரியாதவர்கள். நெருப்பில் விழுந்த விறகுகள் என்றார்.

விளக்கம் கேட்டேன். நானும் அவர்களைப் போல்தான் ஊதியம் வாங்குகிறேன் கிடைத்த பொருளைப் பேணிப் பாதுகாக்கிறேன். கிடைத்த பொருளைச் சிறிதெனக் கருதி அதைச் செலவு செய்து விட்டுப் பெரிய பொருளுக்கு ஏங்குவதில்லை. இவர்கள் பெருந் தொகைகளைக் கடனாக வாங்குகிறார்கள். அதையும் செலவு செய்து விட்டு இப்படிப் பேசுகிறார்கள்.

நெருப்பில் விழுந்த விறகுகளைப் பாருங்கள். விழுந்தவுடன் பிரகாசமாக எரியும். எவ்வளவு விறகு விழுந்தாலும் அவை எல்லாம் எரிந்துமுடிந்து இறுதியில் அந்நெருப்பும் அழிந்துவிடும். அதுபோலத் தான் இருக்கிறது இவர்கள் வாழ்க்கை. தமக்குச் சிறியவாகக் கிடைத்த பொருளைப் பாதுகாக்காமல் பேராசை என்னும் நெருப்பில் பணத்தைப் போட்டு எரித்துவிட்டுத் திண்டாடுகிறார்கள். குறுகிய வாழ்நாளையுடைய இவர்கள் பொருள் வளர்ச்சியும் அடையாமல் அதனால் பெறக்கூடிய மற்ற நன்மைகளையும் அடையாமல் அழிகிறார்கள். நான் சிறப்பாக வாழ்வதற்கு நீதிநெறிவிளக்கப் பாடல்தான் காரணம் என்று சொல்லி அப்பாடலையும் கூறினார்.
இதோ அப்பாடல்,

பெற்ற சிறுகப் பெருத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க்(கு) ஆக்கம் அரிதம்மா—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழல் மாயா திரா.

நீதிநெறிவிளக்கம் 64.

ஸ்ரீ குமரகுருபரர் - 300 ஆவது ஆண்டு விழா

மெய்யன்பர்களுக்குச் சில நற்செய்திகள்

நூலகம் 306 13

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் முத்தி எய்திய 300 ஆம் ஆண்டு விழா விபவ வைகாசி (88 - மே) யில் வருகிறது. அவ்விழாத் தொடர்பான முதல் அறிக்கை ஸ்ரீ குமரகுருபரர் திங்கள் இதழின் தொகுதி 2, பகுதி 11 ல் வெளியிடப்பெற்றுள்ளது.

இச்சீரிய விழாவைப் பொலிவும் வலிவும் உள்ள பயன் சுரக்கும் விழாவாக நிகழ்த்தும் பொருட்டு அகில இந்திய அளவிலான ஒரு குழு அமைக்க ஏற்பாடாகிறது. அக்குழுவிற்குத் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 26 ஆவது குருமகா சன்னிதானம் புரவலராக இருக்கத் திருவுளம் பற்றியிருக்கிறார்கள். இந்நற்செய்தியைத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் மிக்க மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்கள்.

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் திருவடிகள் பதிந்த திருத்தலங்கள் பலவற்றிலும் 300 ஆம் ஆண்டுவிழா நிகழ்வுறும். அவற்றுள் பெரும்பாலான விழாக்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ

குருமகா சன்னிதானம் எழுந்தருளத் திருவுளம் பற்றியிருக்கிறார்கள்.

1988 மே மாதம் தொடங்கி 1939 மே மாதம் முடிய ஓராண்டுக் காலம் பொது விழாக்கள், தமிழ்ச் சங்க விழாக்கள், பல்கலைக் கழகங்களில் பிரபந்தக் கருத்தரங்குகள், சிறப்பு மலர் வெளியீடுகள், ஆய்வு நூல் வெளியீடுகள், நினைவுக் கல்லெழுத்துக்கள் அமைத்தல் முதலிய வகைகளில் ஸ்ரீ குமரகுருபரரின் நினைவைப் போற்றிக் கொண்டாடத் திட்டமிடப் பெற்றுள்ளது.

தருமையாதீனத் திங்களிதழான "ஞானசம்பந்தம்" இதழிலும் ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டுவிழாத் தொடர்பான அறிக்கைகள் தலையங்கங்கள் முதலியவை வெளிவர விருக்கின்றன.

இவ்விழாச் சிறப்புடனமைய மெய்யன்பர்களின் ஒத்துழைப்பு மிகமிகத் தேவை. ஆங்காங்கு விழாக்கள் நிகழ்த்த விரும்புவோர் துணைக் குழுக்கள் அமைத்துக் கொள்ளவும், கருத்துரைகள் பெறவும், நல்கவும் "செயலர் ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு விழாக்குழு, ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் 612504, தஞ்சைமாவட்டம், தமிழ்நாடு" என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டப்படுகிறார்கள்.

அன்பர்கள் ஸ்ரீ குமரகுருபரர் அருளிய நூல்களை ஓதியும், ஓதுவித்தும், அவர் தம் நீதிகளைப் பின் பற்றியும் பரப்பியும் நலம் பெறுவாராகுக.

"வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்"

செந்தமிழ்க் கலாநிதிக்குப்

பாராட்டு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆவணிமூலத் திருநாளில் "செந்தமிழ்க் கலாநிதி" பட்டமளிப்புச் செய்ததை யொட்டித் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களால் ஸ்ரீ காசிமடம் கல்வி நிறுவனங்களின் செயலர், செந்தமிழ்க் கலாநிதி திரு. கா. ம. வேங்கடராமையா எம். ஏ., பி. ஓ. எல்., விஜயதசமித் திருநாளில் பாராட்டப் பெற்றார்.

கலைமகள், திருமகள், மலைமகள் ஆகிய முப்பெருந் தேவியர்க்குக் கயிலைமாமுனிவர் ஸ்ரீ ல ஸ்ரீ காவாசி எஜமான்சுவாமிகள் சிறப்பு வழிபாடாற்றி அடியார்கட்குப் பிரசாதம் வழங்கியருளிய பின் செந்தமிழ்க் கலாநிதி திரு. கா. ம. வே. அவர்கட்கும், பெங்களூர் ஸ்ரீ வேங்கடேசா கல்வி நிறுவனங்களின் நிறுவனர், செயலர், தாளாளர், செந்தமிழ்ச் செல்வர், கல்விக் காவலர், வித்துவான் டாக்டர் திரு. ம. வெ. ஜெயராமன் எம். ஏ., டி. லிட்., அவர்கட்கும் பொன்னாடைகள் அணிவித்து ஆசி வழங்கியருளினார்கள். விஜயதசமி வெளியீடாகிய உண்மை விளக்கம் (உரையுடன்) அடியார்கட்கு வழங்கியருளினார்கள்.

பிரத்யேகமாக அமைக்கப் பெற்றிருந்த விழா மேடையில் பாராட்டுவிழா நடைபெற்றது. கயிலைமாமுனிவர் ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் செந்தமிழ்க் கலாநிதியின் நிர்வாகப் பணிமுறை, பதிப்பு, எழுத்துப் பணிகளை நினைவுகூர்ந்து வாழ்த்தியருளினார்கள்.

செந்தமிழ்ச் செல்வர், கல்விக்காவலர், வித்துவான், டாக்டர் திரு. ம. வெ. ஜெயராமன் எம். ஏ., டி. லிட் அவர்கள் உணர்வு

செறிந்த உணர்ச்சிகரமான பாராட்டுரையை நிகழ்த்தினர். ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் காலத்து விஜயதசமிப் பெருவிழா வில் கலைஞர்களும் அறிஞர்களும் பாராட்டப் பெற்ற ஓர் அரிய வரலாற்றுச் செய்தியை அவர்தம் உரையில் குறிப்பிட்டார். செந் தமிழ்க் கலாநிதியின் தமிழ்ப்பற்றை நன்கு விளக்கிப் பாராட்டினர். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் திரு. ம. வெ. ஜெ. அவர்களின் சொல்லாற்றலை, எடுப்பும் மிடுக்கும் வாய்ந்த சொற்பொழிவைத் துய்க்கும் நல்லவாய்ப்பாக இவ்விழா அமைந்தது.

ஸ்ரீ குமரகுருபரர் ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தின் சார்பிலும், ஸ்ரீ குமரகுருபரர் நடுநிலைப்பள்ளி, மற்றும் ஸ்ரீ குமரகுருபரர் தொடக்கப்பள்ளிகளின் சார்பிலும், கயிலைக் குருமணியின் திருநாமத் துடன் விளங்கும் மேனிலைப் பள்ளியின் சார்பிலும் பாராட்டிதழ்கள் படித்தளிக்கப் பெற்றன.

கயிலைமாமுனிவர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் திருக்கரங்களால்**, தமிழக அரசவைக் கலைஞர் **திரு. ஏ. கே. சி. நடராஜன்** பொன்னுடை அணிவித்துக் கௌரவிக்கப் பெற்றார்.

செந்தமிழ்க் கலாநிதி திரு. கா. ம. வே. உணர்ச்சி ததும்ப ஏற்புரை நிகழ்த்தினர். மதுரகவி திரு. தா. ம. வெள்ளைவாரணம் முன்னதாக வரவேற்புரையும், விழாநிறைவில் நன்றி யுரையும் நிகழ்த்தினர்.

பாராட்டு விழாவுக்குப் பின் திரு. ஏ. கே. சி. குழுவினரின் கிளாரினெட் இசைநிகழ்ச்சி சிறப்புற அமைந்தது.

விஜயதசமித் திருநாளுக்கு முன்னதாக மூன்று நாட்கள் ஸ்ரீ காசிமடம் கல்வி நிறுவனங்களின் **கலைமகள்** விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

விஜயதசமித் திருநாளில் கயிலைமாமுனிவர் ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கள் கல்வி நிலையங்களின் மாணவ மாணவிகட்குரிய தேர்வுப் பரிசுகளும் கலைநிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்கட்குப் பரிசுகளும் வழங்கியருளினர்கள்.

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

காஞ்சிபுரத்தில்

கந்தபுராணச் சொற்பொழிவுகள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம் நிகழ்த்தப் பெறுவது.

பிரபவ ஆண்டு ஐப்பசி 6 ஆம் தேதி முதல்
11ம் தேதி முடிய (23 - 10 - 87—28 - 10 - 87) ஆறு நாட்கள்

இடம்:- காஞ்சிபுரம் குமரகோட்டம்
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில்

சொற்பொழிவாளர் :
காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனப் புலவர்
ஜி. சம்பந்தமுதலியார் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்

R. V. சுப்பிரமணியம்
மானேசர்

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

மதுரையில்

கந்தபுராணச் சொற்பொழிவுகள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களின் அருளாணையின் வண்ணம் நிகழ்த்தப் பெறுவது.

பிரபவ ஆண்டு ஐப்பசி 6 ஆம் தேதி முதல்
11 ஆம் தேதி முடிய (23 - 10 - 87—28 - 10 - 87)
ஆறு நாட்கள் நாடோறும் மாலை 6 - 30 முதல்.

இடம் : தருமையாதீனத்திற்குச் சொந்தமான
ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடம், வடக்கு மாசிவீதி, மதுரை.

சொற்பொழிவாளர் :
சிவநெறிச் செம்மல் சைவப்பாதிரி, புலவர்
திரு நீ. சீ. சுந்தரராமன் அவர்கள்
உழவாரம் ஆசிரியர்

அருளாணையின் வண்ணம்
R. சுப்பிரமணியம்.
மானேசர்

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

ஆலயபூஜைப் படிக்காசு நிதி

நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

திரு/திருமதி — முன் இருப்பு	26983—15
குடந்தை துர்க்காகுடில் அப்பு	5—00
மயிலாடுதுறை G. ஞானசுந்தரம்	20—00
சென்னை அயனாவரம் S. பழநி	3—85
உக்கரை கைலாசம்	5—00
திருவான்மியூர் S முத்தப்பன்	10—00
வெள்ளகோவில் R C சாமிநாதன் செட்டியார்	5—00
ஆக ரு	27032—00

தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு	90—00
பாணதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு	75—00
திருந்து தேவன்குடி கற்கடேஸ்வரர் ஆலயச் செலவு	90—00
சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் ஆலயச் செலவு	71—25
ஆக ரு	326—25

Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
LNo. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

ஸ்ரீ நடராஜ விலாஸ்

ஜுவல்லரி ஹால்

சிதம்பரம்

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27,28, கடைத்தெரு, சிதம்பரம்

தென்னார்க்காடு மாவட்டம்—608 001

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

(மாதப் பத்திரிகை)

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தாதாரராகச் சேருங்கள்.

சந்தா விவரம்

வருடச் சந்தா	ரூ. 22
ஆயுள் சந்தா	ரூ. 250
தனிப் பிரதி	ரூ. 2

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் தொலைபேசி

ஸ்ரீராமகிருஷ்ண மடம் 71959

மயிலாப்பூர் : சென்னை600 004. 71231

இராசராசன் கால இலக்கியங்கள்

ம. வே. பசுபதி

எடுப்பு :

மாமன்னன் இராசராசன் காலத்தில் சைவநன்னெறியுடன் பல்வேறு கலைகள் செழித்தன. கவிதைக்கலையும் எழுச்சி பெற்றது. இச்செய்தி நினைந்து இன்புறற்குரியது. இராசராசன் பற்றிய இலக்கியங்களையும் அவன்காலத்திய இலக்கியங்களையும், சிறிதே சிந்திக்க இப்பகுதியைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

இராசராச விஜயம் :

இது சோழப் பொற்காலப் பெரு மன்னனாகிய இராசராசனைப் போற்றிப் பாடிய இலக்கியமாகும். அவனின் வெற்றிச் செய்தி இதில் சிறப்பாகக் கூறியிருந்ததாதல் வேண்டும். இந்நூல் இப்பொழுது கிடைத்திலது. திருப்பூந்துருத்தி சிவன் கோயிலில் இராசேந்திரன் காலத்ததாய சிதைந்த கல்வெட்டால் இக்காவியத்தைச் சிறப்பு நாட்களில் மக்கள் முன் படிப்பதற்காக ஸ்வரணன் ஆன நாராயணன் பட்டாதித்தன் என்பானுக்குப் பார்த்திவ சேகரத் தெரிந்தகைக் கோளார், கண்டராதித்த தெரிந்தகைக் கோளார்; பராந்தக தெரிந்தகைக் கோளார் என்பார்கள் இறையிலியாக நிலம் அளித்த செய்தி தெரிகிறது.

இந்நூல் வடநூலே என்று மறைந்த அறிஞர் திரு. சதாசிவ பண்டாரத்தாரும்; தமிழ் நூலே என்று மறைந்த அறிஞர் திரு மு. ராகவையங்காரும் கூறினர். தமிழகத்தில் தமிழ்ப் பெரு மன்னன் பற்றிப் பாடப்பட்ட நூல் தமிழ்மக்கள் முன்னிலையில் சொல்லப்பட்ட நூல் ஆகையினாலும் இன்ன பிற சிந்தனைகளினாலும் இது தமிழ் நூலாயிருந்தது என்வே பொருந்தும்.

நாராயணன் பட்டாதித்தன் என்பவனே இந்நூலை இயற்றிய வனுதலும் கூடும்.

இராசராசேஸ்வர நாடகம் :

இராசராசேஸ்வரம் என்பது தஞ்சைப் பெரிய கோயிலின் பெயர். இப்பெயரில் ஒரு நாடகம் இயற்றப்பட்டு நடிக்கப்பெற்ற தாகத் தஞ்சைக் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டு இரண்டாம் இராசேந்திரனின் ஆறும் ஆட்சியாண்டுக்கு உரியது. (கி. பி. 1057).

இந்நாடகத்தை இயற்றியவர் பெயர் தெரியவில்லை எனினும் சாந்திக் கூத்தன் திருவாலன் திருமுது குன்றனை விசயராசேந்திரன் ஆசாரியனல் வைகாசிப் பெரிய திருவிழாவில் இந்நாடகம் நடிக்கப்பெற்றது என்றும் நடிகர்களுக்காக இறையிலி நிலங்கள் கொடுக்கப்பெற்றன என்றும், மேலும் அவர்களுக்காக ஆண்டுக்கு 120 கலம் நெல் கோயில் கருவூலத்திலிருந்து தரப்பெற்றது என்றும் அக் கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

கோயிலின் திருப்பெயர் நாடகத்திற்கு இடப்பெற்றிருத்தலினலும், அத்திருக் கோயிலிலேயே நடிக்கப் பெற்றிருத்தலினலும் பெரியகோயில் எடுப்பித்த வரலாற்றைக் கூறியதாகக் கொள்ளல் பொருந்தும்.

மெய்க் கீர்த்தி :

கல்வெட்டுகளின் முன்னர் மன்னனின் வரலாற்றோடு இணைந்த புகழைச் சொல்லும் பாடல்வகையான "மெய்க் கீர்த்தி" என்னும் புதிய இலக்கியப்பிரிவு இராசராசன் காலத்திலேயே தோன்றியது.

தமிழக வரலாற்றுலகிலேயே சிறிதாவது ஒளி இருப்பதற்குக் காரணம் மெய்க்கீர்த்திகள் தாம். இலக்கியத்தோடு வரலாற்றுக்கு என்று தொடர்பு ஏற்பட்டதோ அன்றுதான் வரலாற்றுக்கு ஒளி கிடைத்தது என்று கூடச் சொல்லலாம்.

இராசராசனின் மெய்க்கீர்த்திகள் "திருமகள் போல" என்று தொடங்கும் என்ற செய்தியையும், ஆட்சியாண்டு வளர வளர மெய்க்கீர்த்தி வளரும் என்ற சிறப்பையும் கற்றோர் அறிவர்.

மெய்க்கீர்த்திகளின் இலக்கணச் சிறப்புகள் பற்றி மிக விரிவாகவும் சுவையாகவும் திரு T. V. G. அவர்கள் 1972 சதயவிழா மலரில் தெளிவாக விளக்கியுள்ள அனைத்துக் கருத்துக்களும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கனவே.

மெய்க்கீர்த்திகளைப் பாடியவர்களின் பெயர்கள் தெரியவில்லை யென்றாலும் இராசராசனின் மெய்க்கீர்த்தியைப் பொறுத்த அளவில் இராஜராஜ விஜயம்பாடிய நாராயணன் பட்டாதித்தன் செய்தான் என்று கொள்ளுவது பொருந்துவதாகும். இராசராசன் காலத்தில் இவன் வரலாற்றையே இருகோணத்தில் இவர்கள் சிந்தித்தவர்கள்; கவியாக்கியவர்கள் இவர்கள்; மானுடம் பாடிய வர்கள். இன்னபிற கோணங்களினால் இவர்களுள் ஒருவரே மெய்க் கீர்த்திப் பாடினர் என்பதில் தவறில்லை.

நம்பியாண்டார் நம்பிகளின் நூல்கள்:

திருநாரையூரில் அவதரித்துத் திருவருட் குறிப்பினால் திருமுறை களைப் பதினொன்றாகத் தொகுத்தளித்து நம் வழிபாட்டுக் குரிய வர் நம்பியாண்டார் நம்பிகள். இவ்வளப்பரும் அருட்செயலுக்குத் துணை நின்றவன் மன்னன் இராசராசன். ஆகையினால் அவன் "திருமுறைகண்ட சோழன்" எனப் பெற்றான். திருமுறைகண்ட புராணத்துள் முதலிரண்டு பாக்களுள் "இராசராசன் அரிய முறைதேட" என்ற குறிப்பிருக்கிறது. திருத்தொண்டர் திருவந்தாதி 50, 65, 82 ஆம் பாடல்களில் ஆதித்த சோழனை நம்பிகள் குறிப் பிட்டுள்ளமையை இராசராசப் பாரம்பரிய முறையில் முன்னோனைச் சொல்லுவதாகக் கொள்ளலாம்.

இராசராசன் காலத்தில் திருமுறைகள் ஓதுதலிலும் அதற்காகப் பிடாரர்களை (ஓதுவார்களை) நியமித்தலிலும் கிளர்ச்சி இருந்தமை தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுகளால் அறிகிறோம். தொகுத்தோர் முன்தலைமுறையின ராயின் அக் கல் வெட்டில் அத்தகு குறிப்பு ஒன்றேனும் இருக்குமாதலால் பிற்காலச் சோழர் சரித்திரத்துட் பண்டாரத்தார் கருத்து ஐயுறுதற் கிடமா கிறது. நம்பிகள் திருமுறைகண்ட வரலாற்றினைத் திருமுறைகண்ட புராணம் விரிவாகக் கூறுகிறது. மன்னன் இவரை வணங்கித் திருமுகப் பாசுரம் முதலியவற்றையும் திருமுறையுள் அடக்கி முறை யாக்க வேண்டினமையால் பதினோராம் திருமுறை தொகுக்கப் பெற்றது. இதனுள் நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருநாரை யூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, கோயில் திருப்பண்ணி யர் திருவிருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருசண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை, ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திரு வேகாதச மாலை ஆகிய பத்தும் இறுதியாக அமைந்துள்ளன. பின்னர்ச் சேர்க்கப் பெற்ற 12 ஆம் திருமுறை இத்திருமுறையின்

கண்ணதாய் திருத்தொண்டர் திருவந்தாதியின் விரிவென்பது யாவரும் அறிந்ததே.

திருவிசைப்பா:

தொகுத்தோரை முற்கூறவேண்டிப் பதினோராம் திருமுறை முற்கூறப் பெற்றது. இவ்வொன்பதாம் திருமுறையுள் கோவிலுக்கு நான்கு பதிகங்கள் அருளிய திருமாளிகைத் தேவரும், தஞ்சைப் பெரிய கோவில் உள்பட பத்து திருக்கோயில்கட்குப் பதிகங்கள் அருளிய கருவூர்த் தேவரும், திருவாரூருக்கும் கோவிலுக்கும் பதிகங்கள் அருளிய பூந்துருத்திநம்பி காடநம்பியும் இம்மன்னன் காலத்தின் தெய்வமாக் கவிஞர்கள் ஆவர். கண்டராதித்தர் 950 — 957ல் சோணாட்டை ஆண்டவராதலால் இக்காலத்து இராசராசன் இளைஞனாக இருந்திருப்பான். எனவே, இவரையும் இவன்காலத்து தெய்வமாக்கவிஞராக அடக்கிக்கொள்ளலில் தவறில்லை. இவர்களின் வரலாறுகள் முதலியன திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஒன்பதாம் திருமுறைப் பதிப்புள் விரிவாகவும் முடிபாகவும் அளிக்கப் பெற்றுள்ளமை காண்க. சேந்தனர் கண்டராதித்தர் காலத்திற்கு முற்பட்டவர் என்றும் அந்நூலுள் நிறுவப் பெற்றுள்ள அரிய செய்தியாகும்.

அமிதசாகரன் அருந்தமிழ்:

யாப்பருங்கலக் காரிகை என்னும் அரிய யாப்பிலக்கணநூல் இயற்றியவர் அமிதசாகரர் ஆவர். தஞ்சை மாவட்ட நீடூர்ச் சிவாலயத்தில் I குலோத்துங்கனின் 46 வது ஆட்சி ஆண்டு பாடற்சாசனம் ஒன்று காணப் பெறுகிறது. அதில் "அமுத சாகரன் நெடுந்தமிழ் தொகுத்த காரிகை குளத்தூர்" என்ற தொடரும்.

"தண்டமிழ் அமித சாகர முனியைச்
சயங்கொண்ட சோழமண் டலத்துத்
தண்சிறு குன்ற நாட்டகத் திருத்திச்
சந்த நூற் காரிகை அவனல்
கண்டவன் மருமான்"

என்ற பகுதியும் சிந்திக்கத் தக்கன. அமிதசாகரரைச் சயங்கொண்ட சோழ மண்டலத்தில் இருத்தி ஒருவன் காரிகைசெய்வித்தான் என்றும், அவன் வழியினன் கண்டன் மாதவன் என்றும் இப்பாடற் சாசனம் முற்றிலும் கற்று அறிகிறோம். சயங்கொண்ட சோழ

மண்டலம் என்பது இராசராசன் காலத்தின் தொண்டைமண்டலத்தின் பெயர். இக்காரணத்தாலும் முதற் குலோத்துங்கன் காலத்தவனுகிய கண்டன் மாதவனின் முன்னோன் அமிதசாகரன் என்பதனுலும் இராசராசன் காலத்தவர் அமிதசாகரர் என்று கொள்ள வேண்டும். இது குறித்த விரிவான ஆய்வுகள் பேரறிஞர் திரு மு.இராகவையங்கார் அவர்களின்சாசனத் தமிழ்கவி சரித்திரத்திலும், கல்வெட்டாராய்ச்சிப் புலவர் திரு K.M. வேங்கடராமையா அவர்களின் நீடூர் என்ற கட்டுரையிலும் உள்ளன.

மேற்படி பாடற் கல்வெட்டு காரிகை ஆசிரியர் அமிதசாகரர்என்றும் அமுதசாகரர் என்றும் இருவேறு முறையில் குறிக்கப் பெறுகிறுர் 'அளப்பருங் கடற் பெயர்' என்ப் பாயிரம் கூறுவதால் அமிதசாகரர் என்றே இருத்தல் பொருந்தும்.

கோல நற்குழல் பதிகம்:

திருமால்புரம் என இக்காலத்தில் வழங்கப்பெறும் தொண்டை நாட்டூராகிய திருமாற்பேறு என்னும் ஊரிலுள்ள வைஷ்வத் திருக்கோயிலுள் இராசராசனின் 10 ஆம் ஆட்சியாண்டுக்குரிய ஒரு சாசனம் கிடைத்துள்ளது இராசராசன் காலத்தில் அரசியல் அதிகாரியாக இருந்த குளக்குடையான் அருணிலை ஸ்ரீ கிருஷ்ணன் மூவேந்தப் பிடவூர்வேளார் என்பவரின் தந்தை அத்திருமால் கோயிலில் எழுந்தருளியுள்ள கோவிந்தப்பாடி யாழ்வார் மேல் "கோல நற்குழல்" என்று தொடங்கும் பதிகம் பாடினுர் என்றும் அதனை நித்தமும் ஓத மகன் நிபந்தம் செய்தான் என்றும் மேற்படிக் கல்வெட்டுக் கூறுகிறது. அப்பதிகம் இப்போது கிடைக்கவில்லை.

சாசனப் பாடல்கள்:

முதல் இராஜராஜ சோழனது சாசனங்களே தமிழகத்தில் அதிகமாகக் கிடைப்பன. சுமார் 350 சாசனங்கள். இவற்றுள் பல பாடல்கள். இவற்றுள் இரண்டினை மேற்கோளாகக் கொண்டு இராசராசன் காலத் தனிப்பாடல்களின் அழகினை அறியலாம்.

'அலைபுரியும் புனற்பொன்னி ஆறுடைய சோழன்
அருமொழிக்கி யாண்டிருபத் தொன்ருவ தென்றும்
கலைபுரியும் மதிநிபுணன் வெண்கிழான் கணிச்சைக்
காமருபொற் சூரியன்தன் காமத்தால் வாம

நிலைநிற்கும் கலிங்கிட்டு நிமிர்வைகை மலைக்கு
நீடுழி இருமருங்கும் நெல்விளையக் கண்டோன்
கொலைபுரியும் படையரசர் கொண்டாடும் பாதன்
குணவீர மாமுனிவன் குளிர்வைகைக் கோவே'

என்பது ஒருபாடல். குணவீரமாமுனிவன் திருமலையில்குளங்கல்லிய செய்தி கூறும் இந்தக்கல்வெட்டுப் பாவின் சந்த இனிமையோடு இலக்கியநயம் இழையோடுகிறது. 'பொன்னி ஆறுடைய சோழன் என்று இராசராசனை அறிமுகப் படுத்துதல், 'கொலைபுரியும் படையரசர் கொண்டாடும் பாதன் குணவீரமாமுனிவன்' எனமுரண்புலனைக் கூறுதல் நோக்கத்தக்கன.

திருக்கோவலூர் வீரட்டானத்தில் இராசராச சோழனுடைய மிகநீண்ட அகவல் பாடற் கல்வெட்டுச் சாசனம் அமைந்துள்ளது. இந்தக் கல்வெட்டு வரலாற்றிலக்கியப் பாடல் என்றுகூறலாம்.

ஜய ஜய வென்றமொழி
பன்னிய வாய்மையில் பணியப் பொன்னியல்
விசும்பரில் கதமும் பசும்பரி வெள்ளுளை
நெடுஞ்சுவற் றெடுத்த குறுந்துனைப் படுங்க
நள்ளுறப் பொன்ஞாண் வள்ளுற வைச்ச
தனிக்கால் அரசு மணற்கால் கங்குல்
குழம்புபடு பேரிருள் பிழம்புபட உருட்டிய
செஞ்சுடர் மெளலி வெஞ்சுடர் வானவன்
வழிமுதல் வந்த மஹீமதி வழிமுதல்

கல்வெட்டுப் பாடல் இராஜராஜனுடைய தாயை

'இந்திர சமானன் இராஜஜர்ஞ்ஞனெனும்
புவியைப் பயந்த பொன்மான்'

என்று கூறும் - மான் - பொன்மான் புவியைப் பெற்றெடுத்தது என இல்லாப் பொருளாக - அதிசயமாக உருவகித்தது இலக்கியச் சுவை இழையோடுமிடம். மகனைப்பிரிந்தாள் மணாளனைப்பிரியவில்லை மகன் சிறுவனல்லன் பச்சிளங் குழந்தை பால் உண்ணும்பாலகன் அவனைப் பிரிந்தாள் — ஆனால் தன் கணவனைப் பிரியவில்லை. இனிமையான இவ்வாழ்வில் மட்டுமன்று கொழுந்து விட்டெரியும் தீயினிடையில்கூட என்பதனை,

'முலைமகப்பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகப் பிரியாத் தையல் நிலைபெறும்
தூண்டாவிளக்கு'

என்ற பகுதியில் புலப்படுத்துவது இலக்கிய சுவைமிக்கது,

பெண்ணையாற்றின் வரவு — கபிலக்கல்லின் வரலாறு பேரெட்டான வீரட்டானத்தின் பெருமை கூறும் பகுதிகள் இலக்கியச் சிறப்புடையவை.

இறுதியாகச் சங்ககாலத்து இலக்கிய வரலாற்றைச் சாற்றும் இவ்வினியபாடலைப் போலவே பலப்பல பாடற்சாசனங்கள் இராசராசன் காலக் கல்வெட்டுத் தனிப்பாடல்களாக இலக்கிய உலகில் உலாவரத்தக்கவை,

இலக்கியமும் மக்கள்வாழ்க்கையும்:

இராசராசசோழனுடையகாலத்தில் அதற்குச் சற்றே அண்மைக் காலத்தே தோன்றிய சைவ இலக்கியங்களைக் – தொகுக்கப்பட்ட திருமுறைகளை இராசராசன் காலத்து மக்கள் கற்றும் கேட்டும் சிந்தித்தும் வாழ்ந்த தோடன்றி இலக்கியவாழ்வும் நடத்தியிருக்கிறார்கள்.

திருவாலியமுதரும் பிறரும், எடுத்தபாதம் மழலைச் சிலம்பு என்னும் தொடர்களை ஆண்டனர்.

"வாமத் தொழிலார் எடுத்த பாதம்
மழலைச் சிலம்பார்ப்ப"

— திருவாலியமுதனார் 3:5.

கருப்பூர் நக்கன் எடுத்த பாதம்

அம்பர் முதுபகவர் தளிநக்கன் எடுத்தபாதம்

செட்டி எடுத்தபாதமான கவசசிவன்

காஸ்யபன் எடுத்தபாதப் பிச்சனுனருத்திர சிவன்

ஐஞ்ஞூற்றுவன் எடுத்தபாதமான தர்மசிவன்

என்ற பெயர்களும்

பெரியதளிச்சேரி நக்கன் மழலைச்சிலம்பு
அவனிநாரணவிண்ணகர் நக்கன் மழலைச்சிலம்பு
அவனிசேகர ஈஸ்வரத்துநக்கன் மழலைச்சிலம்பு

என்ற பெயர்களும் காட்டும்.

'நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண் உடையதோர் நெருப்பே'

என்பர் திருமாளிகைத் தேவர். (1:6) பழையாற்று அரைபெருமான் நளி நீறணிபவளக்குன்றம் என்பது கல்வெட்டில் கண்ட பெயர்.

'திருவையாறு அகலாத செம்பொற் சோதி' என்ற தொடர்

'திருவெண்ணவல் செம்பொற் சோதியான தக்ஷிணமேருவிடங்கப் பிச்சனை ஞானசிவன்' என்ற பெயராகவும்

'செம்பொருள் துணிவே சீருடைக்கழலே
செல்வமே சிவபெருமானே என்ற தொடரில் சீருடைக் கழல்

என்பது மக்கள் பெயராகவும் வழங்கியமையைத் தஞ்சைக் கல் வெட்டுக்களால் அறியலாம்.

'மற்றவன் தத்தாநமரே எனச் சொல்லிவானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப் பொருளன் எனப்பேசுவரே'

என்ற நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கின் பிரதிபலிப்பே 'தத்தாநமரே. காண் என்றமிலாடுடையார்' என்ற தொடர்.

இவற்றைக் கொண்டு நோக்கும் காலத்து இராசராசன்கால தெய்வ இலக்கியங்கள் முகிழ்த்த காலம்; மக்கள் தெயவ இலக்கி யங்களைப் பயின்று பற்றுடையராக நின்று பெயராகச் சூடிக் கொண்டும் சூட்டியும் இன்புற்ற காலம் என்பது அறியப் பெறும்.

முதலாம் இராசராச சோழனின் சைவசமயத் தொண்டு

தா. ம. வெள்ளைவாரணம்

முதலாம் இராசராச சோழனுடைய பட்டப் பெயர்களில் **சிவபாத சேகரன்** என்பதும் ஒன்றாகக் காணப்படுகிறது. இதனால் இவனுடைய சைவசமயப் பற்றின் திண்மையை நன்கு அறியலாம்.

இவன் தனது தலைநகரான தஞ்சாவூரில் **இராசராசேச்சரம்** என்னும் மாபெரும் கோயில் எடுப்பித்துள்ளான். இக்கோயிலுக்குக் கேரளாந்தகன் வாயில் இராசராசன் வாயில் என இரண்டு வாயில்களையும் கருவறையின் மீது 216 அடி உயரமுள்ளதான வானளாவிய விமானத்தையும் அமைத்தான். விமானத்தின் உச்சியில் உள்ள ஸ்தூபிக்கு 3000 கழஞ்சு எடையுள்ள பொற்றகடு வேய்ந்தான். தெற்குச்சுற்றில் கணபதிக்குப் பரிவார ஆலயமும், வடக்குச்சுற்றில் சண்டேஸ்வரர்க்கு ஒரு ஆலயமும் கட்டுவித்தான்.

சண்டேஸ்வர பிரசாத தேவர், பஞ்சதேக மூர்த்தி, சுப்ரமணியர், தக்ஷிணாமூர்த்தி முதலான செப்புத்திருமேனிகளையும் எழுந்தருளுவித்தான். மூலவரான பெருவுடையார்க்கும் ஏனைய திருமேனிகளுக்கும் எண்ணற்ற பொன்னாபரணங்களையும் பொன் வெள்ளிப் பாத்திரங்களையும் வழங்கி நாள் வழிபாட்டுக்கும் திருவிழாக்களுக்குமாகப் பல ஊர்களை நிபந்தமாக விட்டான்.

மற்றும் தஞ்சைப் பெரியகோயிலின் நடைமுறைக்காக ஸ்ரீ பண்டாரிகள், பரிச்சாரகமாணிகள், கணக்கர்கள் ஆகியோரை நியமித்தான். கோயிலில் திருவிளக்கு ஏரிக்க எண்ணற்ற ஆடுகளை நிபந்தமாக விட்டான். நாடோறும் நாட்டியம் ஆடவும் பாட்டுப் பாடவும் நானூறுக்கு மேற்பட்ட பதிலாரையும், நட்டுவர்களையும், வங்கியம்

உடுக்கை வீணை கொட்டிமத்தளம் முதலியவற்றை வாசிப்போர்களையும், ஆரியம் பாடுவார் தமிழ் பாடுவார் ஆகியோர்களையும் நியமித்தான்.

மற்றும் முதலாம் இராசராசன் செய்த அரிய பெரிய சிவத்தொண்டு திருமுறைகளைத் தொகுத்தளித்ததாகும். எல்லாத் தலங்கட்கும் உரிய தேவாரப் பதிகங்கள் அனைத்தையும் ஒருங்குதிரட்ட வேண்டும் என்ற பேரார்வம் கொண்டான். இதன் பொருட்டுத் தில்லையில் ஒடுக்கிவைக்கப்பட்டிருந்த தேவார ஏடுகளை வெளிப்படுத்தி நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டு ஏழுதிருமுறைகளாகத் தொகுப்பித்தான். அத்தேவாரப் பதிகங்கட்குப் பண்வகுக்க விரும்பினன். ஆகவே திருஎருக்கத்தம் புலியூரில் வாழ்ந்தவரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மரபில் வந்தவருமான ஒரு பாடினியாரைக் கொண்டு பண் வகுத்தமைத்தான்.

அத்தேவாரத் திருப்பதிகங்களைத் தொகுத்து முறைப்படுத்தியதோடு விட்டுவிடாமல், அவற்றைத் தஞ்சை இராசராசேச்சுரத்தில் நாடோறும் விண்ணப்பம் செய்வதற்காக நாற்பத்தெட்டு பிடாரர்களை (ஓதுவார்களை) நியமித்தான். இதனுல் இவன் சைவசமயத்திற்குச் செய்த அரும்பெரும் தொண்டு புலனுகிறது.

மேலும், திருவியலூர்க் கோயிலில் துலாபார தானமும், இரணிய கர்ப்பதானமும் செய்தான். மலையாள நாட்டில் உள்ள திருநந்திக்கரை என்ற ஊரில்உள்ள கோவிலில் சதயநாளில் திருவிழா நடத்த ஏற்பாடு செய்தான். ஈழ நாட்டில் (இலங்கையில்) உள்ள பொலனருவா என்ற ஊரில் ஒரு சிவன்கோவிலை எழுப்பி(அதற்குத் தன் தாயாரின் நினைவாக) வானவன் மாதேவி யீச்சரம் என்று பெயர் சூட்டினன்.

இன்னோரன்ன செய்திகளால் முதலாம் இராசராச சோழன் சைவசமயத்திற்குச் செய்த தொண்டுகள் புலனுகின்றன.



தஞ்சை இராசராசேச்சரத்து ஓவியங்கள்

கலைப் பித்தன்

சோழமன்னர்கள் கட்டடக்கலையையும், சிற்பக்கலையையும் இசைக்கலையையும் நாடகக்கலையையும் போற்றி வளர்த்ததைப் போலவே ஓவியக்கலையையும ஓரளவுக்குப் போற்றி வளர்த்திருக்கிறார்கள். ஆனால் சோழர்கால ஓவியமாக நமக்குக் காணக் கிடைத்திருப்பவை தஞ்சை இராசராசேச்சரத்து ஓவியங்கள் மட்டுமே.

தஞ்சைப் பெரிய கோயிலின் கருவறைக்குள்ளேயே அமைந்துள்ள திருச்சுற்றாலையின் சுவர்களில் முதலாம் இராசராச சோழன் காலத்தில் ஓவியம் தீட்டப்பட்டன. பல நூற்றாண்டுகளுக்குப் பின் நாயக்கர்கள் அவ்வோவியங்களை மறைத்து அவற்றின்மேல் மெல்லிய சுதையைப் பூசித் தம்கால ஓவியங்களைத் தீட்டினர். இங்ஙனம் வரையப்பட்ட நாயக்கரது ஓவியங்கள் சில நூற்றாண்டு களுக்குப் பின் சில இடங்களில் படல் படலாக உதிரத் தொடங்கின. 1930—ஆம் ஆண்டில் திரு S. K. கோவிந்தசாமி என்பவர் நாயக்கர்கால ஓவியங்களின் கீழே சோழர்கால ஓவியங்கள் மறைக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்தார். தொல்பொருள் ஆராய்ச்சித்துறையினர் ரசாயனப் பொருட்களின் உதவியால் நாயக்கர்கால ஓவியங்களை அகற்றிச் சோழர்கால ஓவியங்களை வெளிக் கொணர்ந்தனர். அங்ஙனம் வெளிக்கொணர்ந்த ஓவியக்காட்சிகளைப் பற்றிக் கீழே காண்போம்.

தடுத்தாளும் ஓவியக்காட்சி :

ஒரு திருமணப்பந்தல்; அங்கே சுந்தரர் இருக்கிறார். திருமணத்தைக் கண்டுகளிக்கப் பலர் கூடியிருக்கிறார்கள். சிவபெருமான், கிழவேதியராக வந்து நிற்கிறார். அவரது ஒருகையில்

தாழங்குடையும் மறுகையில் அழுமை ஓலையும் காணப்படுகின்றன. இங்ஙனம் திருமணத்தைத் தடுக்கவந்த கிழவேதியரைச் சுந்தரர் வியப்போடு பார்க்கிறார். சுற்றத்தார்கள் திகைத்து நிற்கிறார்கள் அவர்களுக்கு அருகே திருவெண்ணெய்நல்லூர் திருக்கோயில் தீட்டப்பட்டிருக்கிறது இக்கோயில் வாயிலினுள் மக்களின் கூட்டம் செல்கிறது அற்புதமாக இந்த ஓவியம் இருக்கிறது.

கயிலைக்குச் செல்லும் ஓவியக்காட்சி :

வெள்ளையானைமீது சுந்தரர் அமர்ந்து செல்கிறார். கையிலே தாளம் ஏந்திப் பாடல் பாடியவாறு செல்கிறார். அவருக்கு முன்னே குதிரைமீது ஏறிச் சேரமான் பெருமாள் செல்கிறார். சேரமான் தமது இரண்டு கைகளையும் கூப்பியவாறு பின்பக்கமாகத் திரும்பிச் சுந்தரரைப் பார்க்கிறார். வெள்ளையானையும் குதிரையும் கடல்மீது செல்லுவதுபோல் தெரிகிறது. கடலில் அலைகளும் அலைகளுக்கு இடைஇடையே மீன்களும் வரையப்பட்டுள்ளன. வானத்திலிருந்து கந்தர்வர்கள் பூமாரி பொழிகிறார்கள்.

கயிலைமலைக்காட்சி :

கயிலாயமலை - இங்கே ஒரு பாறையின்மேல் விரித்த புலித் தோல் மீது சிவபெருமான் உட்கார்ந்திருக்கிறார். சுற்றிலும் தேவர்களும் பூதங்களும் நிறைந்திருக்கிறார்கள். சிவனுக்கு முன்னே நந்தி படுத்திருக்கிறது. அரம்பையர் சிலர் நடனமாடுகிறார்கள். கயிலையை அடைந்த சுந்தரரும் சேரமானும் கைகூப்பி வணங்குகிறார்கள்.

பொன்னம்பலக்காட்சி :

கருவறைச் சுற்றுலையின் மேற்குப்பக்கத்துச் சுவரில் இவ்வோவியம் தீட்டப்பட்டிருக்கிறது. பொன்னம்பலத்தில் நடராசர் கையிலே அனல் ஏந்திக் கூத்தாடுகிறார். எதிர்புறத்தே ஒருஅரசன் கைகூப்பியவாறு நிற்கிறான். அவனுக்கு அருகில் அவனது மூன்று மனைவியர்கள் பக்திப்பெருக்குடன் வணங்குகிறார்கள். மற்றும் பல அதிகாரிகளும் சேவகர்களும் ஆடவர் மகளிர்களும் இவ்வோவியத்தில் காணப்படுகிறார்கள். இவ்வோவியம் சோழர்கால மக்களின் ஆடை அணி பற்றிய நாகரிகத்தை நமக்கு அறிவிக்க வல்லதாக இருக்கிறது.

திரிபுரக்காட்சி :

கருவறைச் சுற்றுலையின் வடக்குப் புறச்சுவரில் இவ்வோவியம் தீட்டப்பட்டிருக்கிறது. விநாயகரும் சுப்பிரமணியரும் அருகிலே இருக்க, தேவகணங்கள் சூழ்ந்து நிற்கச் சிவபெருமான் எட்டுக் கரங்களுடன் தேரிலே காட்சியளிக்கிறார். இவரது தோற்றத்தில் சீற்றத்தின் கொந்தளிப்புப் பொங்கி நிற்கிறது.

இவ்வோவியத்தின் மறுபுறத்தில் உள்ள ஓவியத்தில் முப்புரத்தைச் சார்ந்த அசுரர்கள் சிலர் இறந்து கிடப்பது தெரிகிறது. சில் அசுரர்கள் தமது மனைவி மக்களுடன் அஞ்சிச் சிதறி ஓடுகிறார்கள்.

நாட்டிய மகளிர் ஓவியம் :

பல இசை வாணர்கள் பல்வகை இசைக் கருவிகளால் இசை எழுப்புகிறார்கள். நாட்டிய மகளிர் தமது உடலை நெளித்து வளைத்து நடனமாடுகிறார்கள். குழல் ஊத, யாழ் இசைக்க, முழவு அதிர ஆடல் அணங்குகள் முத்திரைகாட்டிக் கையை மடக்கிக் கண்ணை அசைத்துக் கழுத்தை நெளித்து ஆடும் அழகு மிக நன்றாக அமைந்திருக்கிறது.

இராசராசனும் கருவூர்த்தேவரும் நிற்கும் காட்சி :

இராசராசனும் கருவூர்த்தேவரும் அருகருகே நிற்கிறார்கள். முழங்கால் வரையிலான முழுஉருவமாக வரையப்பட்டிருக்கிறது இவ்வோவியம். இராசராசனுக்கு வலப்பக்கத்தில் கருவூர்த்தேவர் நிற்கிறார். அரசனுடைய காதில் ஏதோ ரகசியம் சொல்லுவது போல அவன் பக்கமாகச் சற்றுத் திரும்பியபடி கருவூர்த் தேவர் நிற்கிறார். இவருக்குத் தாடியைப் போல மீசையும் நீண்டு வளைந்து கீழ்நோக்கித் தொங்குகிறது தலையில் கிரீடம் ஒன்று காணப்படுகிறது. இராசராசன் வளமான உடற்கட்டோடு காணப்படுகிறான். தலையிலே கிரீடம் இருக்கிறது. காதிலும் கழுத்திலும் அணிகள் காணப்படுகின்றன. கருவூர்த் தேவர் கூறிய ரகசியத்தைக் கேட்டதால் ராசராசன் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறான். சிந்தனையின் ஆழம் அவன்முகத்தில் மிகத் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த ஓவியங்களைத் தஞ்சைக்குச் சென்று எளிதில் காண முடியாது. இவ்வோவியம் உள்ள சுற்றுலை இருபுறமும் கதவுகளால் மூடப்பட்டிருக்கிறது. தஞ்சைக்கோயிலில் உள்ள தொல்பொருள் ஆய்வுத்துறையினரிடம் அனுமதியும் பெற்று அவர்களால் கதவு திறந்துவிடவும் பட்டால் காணலாம்.

நூல் நிறை

பண்டார மும்மணிக்கோவை

(மூலமும் உரையும்)

[**உரையாசிரியர்:** காஞ்சிபுரம், தொண்டை மண்டல ஆதீனம் 229 ஆவது பட்டம் சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள். **பக்கங்கள்:** 15 + 128. **வெளியீடு:** அருள் நூல் பதிப்புக் குழுவினர். **கிடைக்குமிடம்:** மேலாளர் ஸ்ரீ தொண்டைமண்டல ஆதினம், 57, உபதலைவர் பரமசிவம் தெரு, பெரிய காஞ்சிபுரம் 631 502]

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் தம் குருவாகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகரின் பேரில் துதித்த அரிய சாத்திரப் பனுவல்கள் அடங்கிய நூல் பண்டார மும் மணிக்கோவை என்பதாகும். இந்நூலுக்கு டாக்டர் உ. வே. சா எழுதிய குறிப்புரையும், சிவத்திரு. வயிநாகரம் இராமநாதன் செட்டியாரியற்றிய பொழிப்புரையும் உள்ளன. இவ்வுரை விருத்தியுரை எனலே பொருந்தும்.

தொண்டை மண்டலஆதீனம் 229 ஆவது குருமகாசன்னிதானமாக விளங்கியவர்கள் பூர்வாசிரமத்தில் ஆரணி தருமை முதலிய ஊர்களில் பல பெரிய தமிழ்ப் பணியாற்றியவர்கள் என்பதும், பழுத்த தமிழ்ப்புலமைப்பாலிக்கபெற்றவர்கள் என்பதும் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் என்னும் பெயருடன் விளங்கியிருந்தார்கள் என்பதும் தமிழ்கூறு நல்லுலகம் தானினிதுணர்ந்த செய்திகளாகும். அவர்கள் அவ்வண்ணம் விளங்கிய காலத்து ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து ஸ்ரீ காசிமடத்து இதழாக வெளிவந்து கொண்டிருந்த 'குமரகுருபரன்' என்னும் திங்களிதழில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய பல்வேறு நூல்களுக்கு விளக்கவுரைகள் - விருத்தியுரைகள் எழுதி வந்தார்கள். அவற்றுளொன்று பண்டார மும்மணிக்கோவை விருத்தியுரையாகும்.

பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை என்ற வழக்கமான முறையைப் பின்பற்றுமல் பாடலையொட்டியே விளக்கவுரையாகவே தொடங்கி அதனுள்ளேயே முன்னைய இரண்டும் அமையச்செய்துள்ள திறம் கற்றின்புறற்குரியதாகும்.

அரிய இலக்கிய மேற்கோள்கள் (உ-ம் பக். 21) மறுப்புரைகள் (உ-ம் பக். 28) சாத்திர விளக்கங்கள் (உ-ம் பக். 29) ஆதீனங்களின் அரிய மரபுமறைகள் (உ-ம் பக். 86) ஆகியன பொலிய இனிய நடையில் இவ்விருத்தி அமைந்திருத்தலின் தமிழ்ச் சைவ உலகிற்கு இது பெறலரும் பரிசிலாகும்.

நூலின் பின்னிணைப்பாகப் பண்டார மும்மணிக்கோவைமூலமும் முன்னிணைப்பாகத் திருவுருவப்படங்கள் ஐந்தும், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள், தொண்டை மண்டல ஆதீனம் கயிலைப்புனிதர் சீலத்திரு. குருமகா சன்னிதானம் ஆகிய ஞானப்பெருந்தலைவர்களின் ஆசியுரைகளும் பதிப்புக்கு மேலும் மதிப்பூட்டுகின்றன.

1953 ஆம் ஆண்டின் நிலைமைப்படி அவர்கள் எழுதிய வாழ்த்துப் பாடலை (பக்கம் *109*) வரலாற்றுணர்வுடன் படித்துப் பார்க்காமல் *1987* ஆம் ஆண்டில் மீண்டும் அச்சிட்டுள்ளது பிழையே ஆகும்.

— ம. வே. பசுபதி

எம் குருநாதரான மாசிலாமணி ஒரு காந்தமணி. ஏனென்றல் எம் நெஞ்சாகிய இரும்பை அவர் தன்பால் இழுத்துக்கொண்டார்.

பண்டார மும்மணிக்கோவை —16

உலகத்து மணிகளெல்லாம் பிறரால் கைக் கொள்ளப்படும். ஆனல் எம்குரு நாதராகிய 'மாசிலாமணி எம்மை ஆட்கொள்ளும்.

பண்டார மும்மணிக்கோவை—22

ஸ்ரீ குமரகுருபரர் இதழ்

இந்நூற்றாண்டில் திருநெறியாகிய சைவத்திற்கும், செந்தமிழ் மொழிக்கும் பின்னும் பல அருளறப் பணிகளுக்கும் வற்றாவளர்ச்சிப் பொருள் வழங்கி வளர்த்துவரும் ஞானப் பண்ணையும் சைவப்பெரு நிலையமுமாகிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசித்திருமடத்தின் தலைவர் கயிலைமாமுனிவர் திருவார்பெருந்திரு காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் தண்ணிய உள்ளத்தில் முகிழ்த்தெழுந்ததன் பயனாக, அம்மடத்தைத் தோற்றுவித்த, திருவருள் ஞானங்கைவரப் பெற்ற ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருப்பெயரால் "ஸ்ரீ குமரகுருபரர்" என்னும் சமய இலக்கிய திங்கள் இதழ் செவ்விதின் மலர்ந்து எழில்தழைவுறும் முன்னேட்டினைப் பெற்றுச் செந்தமிழ் மணமும் சிவமணமுங்கமழ, கலை, மொழி சமயம் தொடர்பான கருத்துக்களோடு, சமுதாய வளர்ச்சிக்கு வேண்டிய சிறந்த செய்திகளையும் முழுமுதற்கடவுளோடு மக்கட்குத் தொடர்புண்டாக்க, சமயகுரவர்களும் ஏனைய அருளாளர்களும் அருளிச்செய்த திருநெறிய தமிழ்ப்பாடல்களின் தெளிந்த கருத்துக்களை; மிக எளிய இனிய முறையில் விளக்கும் ஆய்வுரைகளையும், சித்தாந்தசாத்திரக் கட்டுரைகளையும், சமய இலக்கியக் கட்டுரைகளையும், சிறப்பும் செழுமையுஞ் சான்ற நம் தாய்மொழியாகிய தமிழின் பண்டைய இலக்கண இலக்கிய பரப்பையும் செறிவையும், சிறந்த சமய அறிவும் இலக்கிய உணர்வும் நிரம்பிய பேரறிஞர்கள் பண்புற ஆய்ந்து விளக்கும் கட்டுரைகளையும் தன்னகத்துக்கொண்டு மிளிரும் இவ்விதழ் ஒன்பது ஆண்டுகள் நிறைவுற இஞ்ஞான்று பத்தாம் அகவையைத் தொடங்குகிறது.

இறைவன் திருவருள் பெருக இச்செந்தமிழ்இதழ் பின்னும் புத்தம்புதிய இலக்கண இலக்கிய, வரலாற்றுக் கட்டுரைகளாகிய நறுமணமலர்களைத் தமிழ்த்தாயின் திருவடிகளிற் சொரிந்து மேன் மேலும் வளர்ந்தோங்கித் தமிழகத்தில் மட்டுமின்றித் தமிழ் வழங்கும் ஈழம் முதலாய பிறநாடுகளிலும் கலைமலிந்த தமிழ்மொழியையும், சித்தாந்தச் சைவச் செந்நெறியையும் பரப்பிச்சிறந்து நிலவ, சீரலைவாய்ச் செந்திற் பதிபுரக்கும் செவ்வேள் திருவருளை நினைந்து வணங்குகிறேன்.

ஸ்ரீ குமரகுருபரர் திருமரபு நீடு தழைக!

தி. கோ. பஞ்சாபகேசன்.

திருச்சதகமும்
கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியும்
அணிநலல ஒப்பீடு

தொடர்ச்சி

ப. பாஸ்கரன் M. A., M. Phil.,

ஆ. உருவகம்

ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்கு ஏதாவது ஒரு தொடர்பு இருந்தால், அத்தொடர்பு கொண்டு இரண்டையும் இணைத்துப் பார்க்கிறோம். அப்போது உவமை பிறக்கிறது. உவமை கூறும்போது கூறவந்த பொருள் வேறாகவும், அதற்குக் காட்டும் உவமை வேறாகவும் இரண்டும் தனித்தனியே இருக்கும். கயல் போலும் விழி என்று சொன்னால் விழி என்னும் பொருளும் கயல் என்னும் உவமையும் வேறுவேறாய் நிற்கின்றன.

ஒருவருக்கு உணர்ச்சி மேம்படும் போது பொருளையும் உவமையையும் வேறு வேறாகக் கருதாமல் இரண்டையும் ஒன்றாகக் கருதிப் பேசும்நிலை நேரும். இங்ஙனம் பொருளிடத்தில் உவமையை ஏற்றி ஒன்றாகக் கூறிவிடுதலையே உருவகம் என்று புலவர் கூறுவர். "விழிக் கயல் புரளும்" என்னும் போது விழி ஆகிய கயல் என்று குறிக்கின்றோம் விழி என்னும் பொருளையே கயல் என்று கூறுகின்றோம் அஃதாவது விழி வேறு கயல் வேறாகக் கருதவில்லை. இதுவே உருவகம்: தொல்காப்பியர் உருவகம் வன்ற சொல்லைக் கூறாவிட்டாலும் இந்த நிலையைச் சுட்டும்போது "பொருளே உவமம் செய்தனர் மொழியினும்" என உவமவியலில் குறித்துள்ளார். பின் வந்தவரான தமிழ்த் தண்டியார் "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்" என்று விதி கூறியுள்ளார்.

உவமைக்கும், உருவகத்திற்கும் அவற்றின் தொடரமைப்பிலே ஒரு வேறுபாட்டை அறியலாம், கயல்விழி என்பது உவமை. விழிக் கயல் என்பது உருவகம். அஃதாவது உவமைத் தொடரில் உவமை

முன்னும் பொருள் பின்னும் இருக்கும். உருவகத் தொடரில் பொருள் முன்னும் உவமை பின்னும இருக்கும்.

இவ்வகையில் உவமையைப் போலவே உருவகமும் தமிழ் மக்களின் பேச்சு வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் சிறப்பிடம் பெற்றுத் தொடர்ந்து வருகிறது. திருக்கருவைப்பதிற்றுப் பத்தந்தாதியில் உவமைகளைவிட உருவகங்கள் எண்ணிக்கையில் மிகுதியாக அமைந்திருக்கின்றன. திருச்சதகத்திலும் உருவகங்கள் அமைந்துள்ளன. இவ்விரு நூல்களின் உருவகங்களைக் கீழே ஒப்பாய்வு செயது காண்போம்.

"முத்திக்கு வித்து (உ)ன் அடியார்கள் சிந்தை
முளரிக்கு அருக்கன் மொழியெண்
சித்திக்கு மூலம் தவயோகி கட்குத்
தெளிகன்னல் ஊறும் அமிர்தம்
சத்திக்கு நித்தம் அருள்வீசு கொண்டல்
களவீசன் எங்கள் பரமன்
அத்திக்கு முன்னம் வரமேவு வித்த
கருவேசன் அம்பொன் அடியே"

இச்செய்யுளில் ஏழு உருவகங்களை அதிவீரராமர் அமைத்துள்ளார். திருக்கருவை நகரில் களாமரத்தின் நிழலின் மேல் எழுந்தருளியுள்ள ஈசனரின் திருவடிகளை முத்திக்கு வித்து என்றும் சிந்தை முளரிக்கு அருக்கன் என்றும், எண் சித்திக்கு மூலம் என்றும், தவயோகிகட்குக் கன்னல் என்றும், அமிர்தம் என்றும், பக்தி செய்வார்க்கு அருள் பொழியும் மேகமென்றும் உருவகித்துள்ளார். மேற்கண்ட ஆறு உருவகங்களில் சிந்தை முளரிக்கு அருக்கன் என்ற உருவகத்துள் சிந்தை முளரி என்னும் மற்றுமோர் உருவகம் உள்ளடங்கி நிற்பதைக் காணலாம். ஆக ஏழு உருவகங்களை இச்செய்யுளொன்றிலேயே அடக்கினர் அவர்.

அ. முத்திக்கு வித்து

வினைவை அறுக்க வேண்டுமாயின் பயிரை வளர்க்க வேண்டும் பயிரை உண்டாக்க வித்து வேண்டும். வித்தே மூல காரணம். அங்ஙனமே முத்தியைப் பெறவேண்டுமாயின் பக்தி வளர வேண்டும். பக்தியை உண்டாக்கக் கருவேசனின் திருவடியைப் பற்ற வேண்டும். எனவே முத்தியைத் தருகின்ற வித்தாக இருப்பது இறைவனின் திருவடிகளே என்பதை உணர்த்தவே அதிவீரராமர் கருவேசனின் திருவடியை முத்திக்கு வித்து என்று உருவகம் செய்கின்றார்.

மற்ெருரு நயத்தையும் இவ்வுருவகத்துள் வைத்து அதிவீரராமர் விளக்குகின்ருர். வித்தாக இருவதும் நெல்மணிகளே; விளைவாக அறுவடை செய்வதும் நெல்மணிகளே அங்ஙனமே முத்திக்கு வித்தாக இருப்பதுவும் கருவேசன் திருவடிகளே. முத்தி என்னும் வீடுபேருக ஜீவாத்மாக்கள் சென்றடையும் இடமாக இருப்பதும் இறைவனின் திருவடிகளே. இதனை வித்து என்னும் உருவகத்தால் உணர வைத்திருப்பது பாராட்டத்தக்க தொன்ருகும்.

ஆ. முளரிக்கு அருக்கன்

சூரியனைக் கண்டதும் தாமரை இதழ் விரிந்து பொலிவு பெறும். தாமரையின் மலர்ச்சிக்குச் சூரியன் காரணம் ஆகின்ருன் அங்ஙனமே அடியார்களின் உள்ளம் மலர்ந்து விரிவதற்கும், பொலிவு பெறுவதற்கும் கருவேசனின் திருவடிகள் காரணமாக இருக்கின்றன. அதனுல் அடியார்களின் சிந்தை முளரிக்கு (உள்ளமாகிய தாமரைக்கு) இறைவனது திருவடிகளைச் சூரியனுக உருவகித்துள்ளார் அதிவீரராமர்.

இ. எண் சித்திக்கு மூலம்

அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்த்தி, பிராகாமியம், ஈசத்தும், வசித்துவம் என்பவை அட்டமாசித்திகள் என்று திருவிளையாடற் புராணத்தில் அட்டமாசித்தி உபதேசித்த படலத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அணுவடிவமான பொருளின் உள்ளே அதனினும் சிறிய வடிவமெடுத்துப் புகுவது அணிமா என்னும் சித்தியாகும். மண் முதலான முப்பத்தாறு தத்துவங்களால் விரிந்த பிரபஞ்சத்தை விடப் பெரியதோர் வடிவம் எடுப்பது மகிமா என்னும் சித்தியாகும். அணுப்பிரமாணப் பொருளை மேருமலை போலக் கனமாகக் காட்டுவது கரிமா எனப்படும். மேருமலை போன்ற பருத்த பொருளை அணுப்போல் இலேசாக இருப்பதாகக் காட்டுவது இலகிமா எனப்படும். பாதாளத்திலிருந்தோன் விண்ணுலகிற்கும், விண்ணுலகத்திலிருந்தோன் பாதாளத்திற்கும் ஆகத் தான் நினைத்தவாறே செல்லவல்லது பிராப்த்தி என்னும் சித்தியாகும். இறைவனைப் போல முத்தொழிலையும் செய்தல் ஈசத்துவம் எவ்வகைப்பட்ட பொருளாயினும் தானிருந்த இடத்திலே தான் நினைத்த மாத்திரத்தில் வருவித்தல் பிராகாமியம் என்னும் சித்தியாகும் மனிதர், தேவர், நரகர், அவுணர், புள், விலங்கு அனைத்தையும் தன்வசமாக ஆக்கிக் கொள்வது வசித்துவம் என்னும் சித்தியாகும். இப்படிப்பட்ட எட்டுச் சித்திகளும் ஒருவருக்குக் கை

வரவேண்டுமானால் யோகத்திலிருந்து சமாதி கைகூடி இறைவன் அருளால் கைவர வேண்டும். எனவே அதிவீரராமர் கருவேசனின் திருவடியை என் சித்திகளுக்குத் மூலம் என்று உருவகித்துள்ளார்

ஈ. தவயோகிகட்குத் தெளிகன்னல்

கரும்பை ஆலையில் அறைத்துச் சாறுபிழிந்தபின், அச் சாற்றினைக் காய்ச்சும் போது கரும்பின் சக்கையை இட்டுக் கொளுத்துவர். கரும்பில் சாறு கொண்ட பிறகு அதன் சக்கை எரிவதைப் பற்றிக் கவலை கொள்ளமாட்டார்கள்.

"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பு எழுந்து வேங்கால் துயராண்டு உழவார்"

என்று நாலடியார் கூறும். இதனை உள்வைத்து அதிவீரராமர் கருவையான் திருவடிகளைத் தவயோகிகட்குத் தெளிகன்னல் என்று உருவகித்துள்ளார். (தெளிகன்னல் என்பது கரும்பின் தெளிந்த சாறு என்று பொருள்படும்).

உ. ஊறும் அமிர்தம்

தவியோகிகள் தமது ஐம்புலன்களையும், பொறிகளையும்' உள் முகமாக ஒடுக்கி மூலதாரத்தில் உள்ள குண்டலினி சத்தியை மேனோக்கி எழுப்பி ஒவ்வொரு ஆதாரமாகத் தாண்டி வந்து புருவ மத்தியிலே நிறுத்தி நிட்டை கூடுவர். அப்போது இறைவனோடு ஒன்றிய ஆற்றலாலே புருவ மத்தியிலே அமிர்தத்தின் துளிகள் சொட்டும். அதனைப்பருகி இன்பம் திளைப்பர். இங்ஙனம் பெறும் அமிர்தம் மேலும் ஊறி வருமாறு அந்த நிட்டையிலே நிலைத்தும் இருப்பர். இதனை மனத்துக் கொண்ட அதிவீரராமர் தவயோகிகட்குக் கருவேசனின் திருவடிகள் ஊறும் அமிர்தம் என்று உருவகிக்கின்றார்.

மேற்கண்டபடி இறைவனது அடிகளை அதிவீரராமர் தெளிகன்னல் எனவும், ஊறும் அமிர்தம் எனவும் உருவகித்திருப்பதானது மணிவாசகரின் திருச்சதகத்திலேயும் காணப்படுகிறது. ஆண்டு மணிவாசகர், "தேனை அமுதே கரும்பின் தெளிவே" என்று உருவகித்திருக்கிறார்.

ஊ. பத்திக்கு நித்தம் அருள்வீசு கொண்டல்

நெற்பயிர் செழித்தோங்கி வளர்வதற்கு மழைநீர் தரும் மேகம் வேண்டும். பத்தியாகிய பயிர் செழித்து வளரத் திருவருளைப் பொழியும் மேகம் வேண்டும். அதனால் கருவேசனின் திருவடிகளைப் பத்திப் பயிர்க்கு அருள் பொழியும் மேகம் என அதிவீரராமர் உருவகித்துள்ளார்.

எ. சிந்தை முளரி

அடியார்கள் பண்பட்டவர்கள், திருந்திய சிந்தை உடையவர்கள். ஆகவே அடியார்களின் உள்ளம் ஏனையோரது கல்மனம் போன்றதன்று. குழைவும் நெகிழ்வும் உடையது. மென்மை வாய்ந்தது இறைவனது திருவடி எழுந்தருளுவதற்கு ஏற்புடையது. ஆகவே அதிவீரராமர் அடியார்களின் உள்ளத்தைத் தாமரை என உருவகம் செய்திருக்கின்றார்.

இதுகாறும் பல உருவகங்கள் நிறைந்த ஒரு பாடலைக் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியிலிருந்து எடுத்துக் கொண்டு ஆராய்ந்தோம் அடுத்துத் திருச்சதகத்திலிருந்து பல உருவகங்களை உட்கொண்ட ஒரு பாடலை எடுத்து ஆராய்வோம்.

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியை நேர் துவர்வாயார் என்னும் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே"

இப்பாடலில் மணிவாசகர் தன் வரலாற்றை உருவகமாக்கிக் காட்டுகின்றார். "முனைவனே! கதியற்ற நான் பிறவிக் கடலிலே வீழ்ந்து விட்டேன். அக்கடலில் துன்பமாகிய அலைகள் என்னை அங்கும் இங்குமாக மோதித் தள்ளின. அப்போது பற்றிக் கொள்ள ஒன்றுமின்றி வருந்தினேன். கொவ்வைக்கனி போன்ற வாயினை உடைய மகளிராகிய புயற்காற்றால் அலைக்கழிக்கப் பட்டேன் அந்நேரத்தில் காமமாகிய சுறாமீன் என்னைக் கவ்வி விழுங்கத் தலைப்பட்டுவிட்டது. "இனிமேல் நான் எப்படி உய்யப் போகிறேன் என நினைத்து வருந்தும்போது திருவைந்தெழுத்தாகிய

புணே (தெப்பம்) கிடைத்தது. அதனை விடாமல் பற்றிக்கிடந்தேன் அதன் பிறகுதான் இறைவனே! நீ முதலும் முடிவுமில்லாத திருவடியான கரையைக் காண்பித்து ஆட்கொண்டாய்" என்கிறார் மணிவாசகர். இச்செய்யுளில் "பிறவிப் பௌவம்" என்று மணிவாசகர் உருவகித்தாற் போலப் "பிறவிக்கடல்" எனவும், "பிறவித் தொடுகுழி", "பவக்கடல்" எனவும் அதிவீரராமரும் உருவகம்" செய்துள்ளார். மணிவாசகர் இப்பாடலில் "காம வான் சுறவு, என உருவகித்தார். அதிவீரராமர் "காமக் கொடிய கனல்" என்று காமத்தை நெருப்பாக உருவகித்து உள்ளார். மணிவாசகர் திருவைந்தெழுத்தைப் புணே என்று உருவகித்திருப்பதுபோல் அதிவீரராமரும் திருவைந்தெழுத்துமே பெரும்புணே" என்று உருவகித்துள்ளார்.

ஏ. இறைவனைப் பற்றிய உருவகங்கள்

அதிவீரராமர் இறைவனைச் செழுஞ்சுடர், அருட்கடல், தூண்டல் செய்யா விளக்கு, சோதி, மறைக்கொழுந்து, அமுதவாரி, கற்பகக்கனி, மாசிலாமணி, குணக்குன்று என்றெல்லாம் உருவகிக்கின்றார்.

செழுஞ்சுடர்

சிவன் செம்மேனி உடையவன். ஒளி வடிவானவன். இதனல் செழுஞ்சுடர் என உருவகித்துள்ளார். மணிவாசகரும் திருச்சதகத்தில் "தனிச்சுடரே" என உருவகித்துள்ளமை ஒத்துள்ளது.

அருட்கடல்

அருளாகிய நீர் நிரம்பிய கடல் என்று இறைவனை அதிவீரராமர் உருவகிக்கின்றார். இறைவன் கொள்ளும் வடிவத்தை அருள் மேனி என்றே சைவ சித்தாந்த சாத்திரமும் கூறும். மணிவாசகர் திருவாசகத்தில் 405 - ஆம் செய்யுளில் "அருட்பெருங் கடல்" என்னும் உருவகத்தை எடுத்துரைக்கின்றார்.

தூண்டல் செய்யா விளக்கு

இறைவன் ஒளிமயமானவன். அதனல் அவனை "விளக்கு" என்றும், "ஒளிவளர் விளக்கு" என்றும், நம் முன்னோர் குறித்தனர். அதிவீரராமர் தமது அந்தாதியில் "தூண்டா விளக்கு" என உருவகிக்கின்றார். மணிவாசகர் திருவாசகத்துள்ளே "சுடரொளி விளக்கே" எனக் குறிக்கின்றார்.

நீர்வளம் பெருக

ஐங்கரத்தானை வழிபடும் முறைகள்

பார்வதீச சிவாச்சாரியார், திருப்பனந்தாள்.

ஒரு சமயம் தேவேந்திரன் சூரபத்மனின் கொடுங்கோல் ஆட்சிக்குப் பயந்து நடுங்கிச் சீர்காழிக்குச் சென்று வேணு மரமாகி இறைவனை வழிபாடு செய்து வந்தான். அது சமயம் தென்னகத்தில் நதி, தடாகங்கள், கூபங்கள் ஆகியவை நீர்வளமின்றி வறண்டு போயின. நீரின்றி நந்தவனங்கள் காய்ந்து மலர்ச்செடிகள் கருகிப் போயிருப்பதைக் கண்டு மனம் வாடிய தேவேந்திரன் இறைவனின் பூஜைக்கு மலரின்றி வேதனையடைந்து இறைவனைத் துதித்தான். அப்போது ஸ்ரீ நாரத மகாமுனி தேவேந்திரனிடம் வந்து அவன் வேதனையையறிந்து அதனை நீக்கும் பொருட்டு நீர்வளம் பெருக்கும் வழியைக் கூறலானர்.

ஸித்தாந்தஸாராவளி சுலோகம்

பத்மை: பூபதிம் உத்பலை: ந்ருபவதூ: தன்மந்த்ரிண: கைரவை: அச்வத்தாதிஸமித்பி: அக்ரஜமுகாந் வர்ணாங்வதூ: விஷ்புஜை: I புத் தன்யாதிபி: அன்வஹம் ச வசயேத் ஜம்பந்து அநாவ்ருஷ்டயே லோகோ: வ்ருஷ்டி சம்ருத்தயே ச ஜுஹுயாத் மந்த்ரீ புனர் வேதஸை: 11-11

"தாமரை புஷ்பத்தினாலேயும் கருநெய்தல் புஷ்பத்தினாலேயும் எல்லா வர்ணத்தாரும் முறையே அரசு பொரசு அத்தி சமித்துக் களினாலேயும் அரிசிமாவினாலேயும் எலுமிச்சம் பழத்தினாலேயும் மழை இல்லாமைக்காகச் சமுத்திர லவணங்களினாலேயும் வரல் வஞ்சியினாலேயும் மிகுதியாய் யும் பொருட்டு ஆற்றோரத்தில் உண்டாகும் நீர்வஞ்சி என்னும் ஔஷதிகளினாலேயும் முறையோடு மந்திரத்தால் ஹோமம் செய்து விநாயகரை வழிபாடு செய்தால் அவரவர்

விரும்பும் பலனும் உண்டாகும். நீ வழிபாடு செய்தாயானல் நீர் வளம் பெருகும்'' என்றும் ''பொதியமலைச் சாரலில் அகஸ்தியர் கமண்டலத்தில் காவிரி நீர் இருக்கிறது அதைக் கொண்டுவர ஸ்ரீ விநயகரை முறையுடன் வழிபாடு செய் ஸ்ரீ விநாயகர் அருள் பெருகும்'' என்றும் நாரதர் கூறிச் சென்றார்.

இந்திரன் ஸ்ரீ விநாயகரை முறைப்படி வழிபாடு செய்தான். தேவேந்திரன் பூஜைக்கு விநாயகர் மனமகிழ்ந்து அவன்முன் தோன்றி குறைகளைத் தீர்த்தருள்வதாகக் கூறிக் காக்கை வடிவமெடுத்துப் பொதியமலைக்குச் சென்று அங்கு அகஸ்தியர் கமண்டலத்தில் அடைத்து வைத்திருக்கும் காவிரி நீரைக் கவிழ்க்கத் திட்டமிட்டு அதன் மீது அமர்ந்தார். காக்கையை விரட்ட அகஸ்த்தியர் கையை ஓங்கும் போது விநாயகர் கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டு ஒரு குழந்தை வடிவெடுத்து ஓடினர்; அக்குழந்தையைக் குட்டுவதற்காக ஓடிய அகஸ்தியர் முன் சுயவடிவம் காண்பித்து நின்றார். கணபதியைக் கண்டவுடன் அகஸ்தியர் தன் பிழையறிந்து ''கணபதியே! பிழை பொறுத்தருளவேண்டும்'' என்று தன் தலையிலேயே குட்டிக் கொண்டார். விநாயகர் அகஸ்தியரை மன்னித்து வேண்டும் வரம் யாது என்று கேட்க இதுபோல் தலையில் குட்டிக்கொள்ளும் அன்பர்களுக்கு அவர்களது பிழையையும் பொறுத்தருளவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டு மேலும் தன் கமண்டலத்தில் முன்போல் நீர் வேண்டுமென்று வேண்டக் கமண்டலத்திலும் நீர் நிரம்பியிருக்க விநாயகர் அருள் பாலித்தார்.

சீர்காழியிலும் நீர்வளம் பெருகித் தேவேந்திரன் மகிழ்ச்சி பெற்றான். அங்ஙனமே இந்நாளிலும் விநாயகர் மந்திரத்தை முறைப்படி உச்சரித்து வழிபட்டு ஹோமம் செய்தால் விநாயகருடைய அருள் சுரந்து நீர்வளம் பெருகும்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

ஆன்மா வேறு - உயிர் வேறு

புலவர் சுப்பையாபிள்ளை, எம். ஏ., பி. எட்.,

பதி, பசு, பாசம் என்பவற்றை இக்காலத்தவர்கள், முறையே இறை, உயிர், தளை என்று தமிழ்ப்படுத்திப் பயன்படுத்துகிறார்கள். இவற்றுள், பசு என்னுஞ்சொல் ஆன்மாவைக் குறிக்கும் என்பதில் யாருக்கும் மாறுபாடு இல்லை. ஆனால் ஆன்மாவை உயிர் என்று குறிப்பிடலாமா? அஃதாவது சைவசித்தாந்தத்தில் ஆன்மாவும், உயிரும் ஒன்றேதானா? இவை ஒன்றல்லாமல் வெவ்வேறாயின், ஆன்மா என்பதற்கு நேரான தமிழ்ச்சொல் யாது? இவ் வினாக்களுக்கு விடை காண்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஆன்மா வேறு - உயிர் வேறு:

முதலாவது ஆன்மாவும், உயிரும் வேறுவேறான இரண்டு பொருள்களாகும் என்பதற்கான சான்றுகளைக் காண்போம்.

சிவஞானபோத மாபாடியத்தில், இரண்டாஞ் சூத்திரத்துக்குப் பிண்டப்பொழிப்பு உரைக்கும்போது, சிவஞானமுனிவர் கூறுவதாவது:

"மேலைச்சூத்திரத்தின் எடுத்துக் கொண்ட சங்காரகாரணனாகிய முதல்வன், கலப்பினால் உடலின் உயிர்போல அவ்வான்மாக்களேயாய்......" (இந்த உரையானது, முனைவர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களால் உலகத்தமிழ்க் கல்வி இயக்கம் வாயிலாக 1986-ல் வெளியிடப்பட்ட பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டது).

இங்கே, 'உடலினுயிர்போல' என்னுஞ் சொல்லினை அடுத்து வரும் முதற்சொல்லிலே, 'அவ் வான்மாக்களேயாய்' என்று, 'அ' என்னுஞ் சேய்மைச் சுட்டுக்கொண்டு முனிவர் பெருமான் கூறுவானேன்? 'இவ்வுயிரேயாய்' என்று உயிர் தம்மையே குறிப்பிடாதது ஏன்? உயிர்வேறு, ஆன்மா வேறு என்பதனாலன்றோ! சிவஞான முனிவருக்குத் தெரியாத இலக்கணமும் உண்டோ? தமது மாபாடிய உரையில், இரண்டாஞ் சூத்திரத்து முதல் அதிகரணத்

இக்கட்டுரையின் கருத்துக்கள் புதுமையானவை. இவற்றை ஏற்றோ மறுத்தோவரும் கட்டுரைகளும் வெளியிடப் பெறும்.

தொடக்கத்திலேயே, 'இவ்வான்மாக்கள் பலவும்' என்னும் மெய் கண்டபெருமானது திருமொழிக் கண்ணுள்ள 'இ' என்கிற அண்மைச்சுட்டுக்கு முனிவர் பெருமான் அருளியுதவும் விளக்கத்தைக் கண்டுதெளிக இதிலிருந்து, மேலே பிண்டப் பொழிப்பில் கூறப் பட்டுள்ள 'அவ்வான்மாக்களேயாய்' என்பதிலுள்ள 'அ' என்னுஞ் சேய்மைச் சுட்டானது, இடைவெளியின்றித் தனக்கு அணுக்கமாக நிற்கிற உயிரைக் குறிக்கவில்லையென்பது தெளிவாக வில்லையா? இது தெளிவானால், ஆன்மாவும், உயிரும் வேறுவேறு பொருள்கள் என்று கொள்வதே சைவசித்தாந்தக் கொள்கை என்பதுவும் தெளிவாகிறதன்றே?

இனி, ஆன்மாவின் தன்மை யாதெனக் காண்போம்:

1. "பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
   பதியினைப் போற்பசு பாச மனாதி......" —திருமந்திரம்.
2. ஏக னநேக னிருள்கரும மாயையிரண்
   டாகவிவை யாறுதி யில்." —திருவருட்பயன்
3. "...... என்றுமுள னன்றளவு முயானு முளனகி..." —நெஞ்சுவிடுதூது
4. "...... என்றுநீ யுளைமற் றன்றே யானுளேன்..." —சிதம்பரமும்மணிக்கோவை.

முதலிய திருவாக்குக்களிலிருந்து, ஆன்மா என்பது என்று முளவா கிய ஆறு அனாதிப் பொருள்களுள் ஒரு பொருளாகும் என்பதும், அதற்கு அழிவோ பொன்று கேடோ இல்லை என்பதும் விளங்கும்.

இஃதிங்ஙனமாக, இன்றைய தமிழுக்கு முதனூலாக விளங்குந் தொல்காப்பியமானது, மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்" என்று மெய்யினது இயல்பினைக் கூறிப் புள்ளியிருக்கும் போது உயிர்க்காமல் 'நிற்கின்ற' இயல்புடைய மெய்களானவை எவ்வாறு 'உயிர்க்கும்' என்பதை அடுத்த சூத்திரத்தில் விளக்கிப் பின்னர், "மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே" என்று உயிர்க்குத் தோற்றமுங் கூறுவதைக் கண்டுணர்க.

இனித் திருவள்ளுவரும், ... "கவரிமா னன்ன ருயிர் நீப்பர் மானம் வரின்" என்னும் போது, உயிரானது நீக்கப்படுவதொரு பொருளென்றும் அதனை நீக்க வல்லவர்கள் கவரிமானன்ன ஆன் மாக்களாகும் என்றுந்தானே கூறுகிறுர்? இதேபோல், "...உயிரினு மோம்பப் படும்" என்பதிலும்: உயிரானது ஓம்பப் படுவதொரு பொருளாகத்தானே கூறுகிறுர்?

திருமூலநாயனர் தமது திருமந்திர முதற்றந்திரத்தில், பொருள் களினது நிலையாமையைக் கூறிவருமிடத்து, யாக்கை நிலையாமை, செல்வநிலையாமை, இளமைநிலையாமை என்பவற்றோடு கூட உயிர் நிலையாமை என்ற அதிகாரத்தையும் உடன் வைத்த தன் மூலம் உயிருக்கும் நிலையாமை யுண்டென்று கூறுவதன் வாயிலாக அலாதிப் பொருள்கள் ஆறனுள் ஒன்றாகிய என்றுமுள்ள ஆன்மாவும் மெய்யின் வழித்தோன்றி நிலையாமையுள்ள உயிரும் வெவ்வேறு பொருள்கள் என்றுதானே கூறுகிறார்?

மணிமேகலைக்குச் செல்வோமா! சமயக்கணக்கர் தந் திறங் கேட்ட காதையில் மணிமேகலையானவள் சைவசித்தாந்தியைப் பார்த்துப் "பரசுநின் றெய்வ மெப்படித்து?" என்று வினவுகிறாள். அதற்கு அவன்,

"இருசுட ரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையு முயிரு மியாக்கையுமாய்க்
கட்டிநிற் போனும்......"

என்று மொழிகிறான். இங்கே, இயமானன் என்பது ஆன்மாவைத் தான் குறிக்கும் என்பது வெளிப்படை. இருசுடர், ஐம்பூதம், இயமானன் ஆகிய எட்டோடும், உயிரும் யாக்கையும் வேறு பொருள்களாக எண்ணப்படுவதாகக் கூறுவானேன்? ஆன்மாவும் உயிரும் ஒன்றேயானல் இவ்வாறு கூறப்படுமா?

இனிப் புறச்சமயத்தவர்கள் ஆன்மா, உயிர் ஆகிய இரண்டை யுங்குறித்துக் கடைப்பிடிக்குங் கொள்கையைக் கண்டறிவதற்காக மணிமேகலைக் காப்பியத்தின் பவத்திறம் அறுகெனப் பாவைநோற்ற காதையுட் புகுவோம்:

1. "அறிவு வறிதா யுயிர்நிறை காலத்து" — (அடி-7)
2. "உலக முன்றி னுயிரா முலக
மலகில; பல்லுயி ரறுவகைத் தாகும்" —— (அடி 55-56)
3. "வினைப்பயன் வினையுங் காலை யுயிர்கட்கு
மனப்பே ரின்பமுங் கவலையுங் காட்டும்" — (அடி 62-63)
4. "அருவுரு வென்பதங் குணர்வு சார்ந்த
வுயிரு முடம்பு மாகு மென்ப" — (அடி 84-85)

என்றெல்லாம் புத்தத்துறவி வாயிலாகச் சாத்தனர் கூறுகிறார். இவற்றிலிருந்து புத்தசமயம் உயிரை ஒரு பொருளாக ஏற்றுக் கொள்கிறது என்பதனைத் தெளிவாக்குகிற இதே சாத்தனர், இதே காதையில்,

"எப்பொரு ளுக்கு மான்மா விலேயென
விப்படி யுணரு மிவைவிட் டியல்பாம்" — (அடி 177-178)

என்று கூறுவதிலிருந்து, சைவம் கூறுகின்ற ஆன்மாவும், உயிரும் வெவ்வேறானவை என்பது விளங்கவில்லையா?

இனி, ஆன்மாவுக்கும் உயிருக்குமுள்ள வேற்றுமையைச் சித்தாந்த சாத்திரங்கள் வாயிலாக மெய்ப்பிக்குமாறு வேண்டுவீராயின், அதுவும் நன்றே.

சித்தியார் இரண்டாஞ் சூத்திரத்து நான்காஞ் செய்யுளில்,

"இருவினை யின்பத் திவ்வுயிர் பிறந்தி றந்து
வருவது போவ தாகும்......"

என்று தடையில் வைத்துக் கூறாமல் விடையில் வைத்தே கூறப் படுகிறது. ஆன்மாவும் உயிரும் ஒன்றே யானால் முதலும் ஈறுமற்ற ஆன்மாவுக்குப் பிறப்பு இறப்புக்களும் வரத்துப் போக்குகளும் உளவாகச் சித்தியார் கூறுமா?

சிவஞானபோத இரண்டாஞ் சூத்திரத்து மூன்றாங் கூற்றில் "இனி, இவ் வான்மாக்கள் மாறிப்பிறந்து வருமென்றது" என்று மெய்கண்ட பெருமான் ஆன்மாக்களுக்குக் கூறும் "மாற்றப்பிறப்பு" வேறெனக் காண்க. இது வேறென்பதை பெருமானே அடுத்து வரும் "கண்ட நனவை......" என்னும் எடுத்துக்காட்டு வெண் பாவில் மயக்கமறத் தெளிவிப்பதிலிருந்து கண்டுகொள்க.

சித்தியார் இரண்டாஞ் சூத்திரத்து இறுதிச்செய்யுள்,

"பிணத்தினை யொத்து வாழ்வோர் பின்னடைப் பிணங்கள் போல
வுணக்கியே யுழல்வி ருங்க ளுடலுயி ருணர்வு மெல்லாங்
கணத்திடைத் தோன்றி மாயுங் காயமென் றறிந்தொ ருக்கால்
வணக்குறி ரரனை......"

என்று அறிவுறுக்கிறது. இங்கே, உடல், உணர்வு ஆகியவற்றோடு உயிரையுஞ் சேர்த்துக் கணத்திடைத் தோன்றிமாயுங் காயம் என்றுரைக்கப் படுகிறது. "மெய்யின் வழிய துயிர் தோன்று நிலை யே" என்பதனை இதனோடு ஒப்பிட்டுக் கண்டுகொள்க. இதனுள் 'உங்கள் உயிர்' என்பதில் உயிருக்கு உடையாராகிய 'நீங்கள்' என்பது வேறாக நிற்பதையுங் கண்டு, இதனைக், "கவரிமா னன்னா ருயிர் நீப்பர் மானம் வரின்" என்பதேனோடும் ஒப்பிட்டு ஆய்ந்து கொள்க. இதனாலும் உயிர்வேறு ஆன்மா வேறெனத் தெளிக.

சைவசித்தாந்தத்தின் உச்சமன்றமாகிய சிவஞானபோதத்தில் உயிர் என்ற சொல் ஆளப்பட்டிருப்பது இரண்டே இரண்டு இடங்களில் மட்டுமே அவற்றுள் ஒன்று,

"உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
லுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே....."
—(2- ஆந் சூத். வெண்பா)

என்பது இங்கே, உள்ளதாவது, புள்ளியொடு இலைஇய மெய் தோற்றுவதாவது, உருவுருவாகி அகரமொடு உயிர்க்கும் உடல் 'உடலில் தோற்ற உயிர் அ அணையும்' எனக் கொண்டு கூட்டி ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலே உள்ளங்கை நெல்லியாகக் கண்டுதெளிக. தெளியவே, ஆன்மாவும் உயிரும் வெவ்வேறெனக் கொள்க.

இனி, ஐயமயக்கங்களை முற்றவும் அறுத்தற் பொருட்டு, ஒரே செய்யுளிலேயே, ஆன்மாவும் உயிரும் ஆக இரண்டுமே வருமிடங்களால் இவையிரண்டும் வெவ்வேறெனக் காண்போம்:

மெய்கண்டபெருமான் உயிரென்ற சொல்லினை ஆளுகின்ற பிறிதோரிடம்,

"ஒன்றணையா மூலத் துயிரணையு நாபியினிற்
சென்றணையுஞ் சித்த மிதயத்து....."

என்பது இங்கே, 'மூலத்து ஒன்றும் அணையா' எனவே, ஆன்மா வானதுதான் மூலத்தினுள்ளே இருக்கும்போது, தன்னுடன் தோன்றும் பொருள் எதுவுமின்றித் தான் மட்டுமே ஆணவத்துள் அழுந்திக்கிடக்கும் என்பது போதருகின்றது. இதுவன்றே தன்னுண்மை என்பது! மூலத்துள், தன்னுடன் அணை பொருள் எதுவுமேயில்லாத ஆன்மாவானது தன்னந்தனியே எழுந்து மேலேயுள்ள நாபிக்கு வரும்போது, இங்கே நாபியிலுள்ள உயிரானது ஆன்மாவோடுங் கூடும் என்கிற பொருளை, 'நாபியினில் உயிரணையும்' என்பதாற் கண்டுகொள்க.

இதிலிருந்து விளங்குவது யாது? மூலத்துள், தனியே ஆன்மா இருக்கும்போது, அதே நேரத்தில், உயிரானது நாபியில் இருக்கிறது என்பதுதானே? அப்படியானல் இவையிரண்டும் ஒன்ருகுமா?

உச்சமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு விளக்கந்தருகின்ற சித்தியாராகிய உயர்மன்றம் கூறுவது:

"படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லிற்
கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்ன
ரடைதருந் தனியே யந்தப் புரத்தினி லதுபோ லான்மா
வுடலினி னஞ்ச வத்தை யுறுமுயிர் காவ லாக"

இந்தச் செய்யுளிலும் ஆன்மா, உயிர் ஆகிய இரண்டுமே குறிக்கப்படுகின்றன. இவற்றுள், ஆன்மாவானது நனவுமுதலாக உயிர்ப்படங்கலீறாக அஞ்சவத்தைப் படுவதொரு பொருளென்றும் அவ்வாறு ஆன்மா அஞ்சவத்தைப் படுகிற அதே நேரத்தில் உயிரானது காவலாக இருப்பதென்றும் கூறப்படுகிறது. ஒரு பொருளுக்கு இருவேறியற்கை கூடாதென்ற அளவைப்படி பார்த்தால், இவையிரண்டும் இருவேறு பொருள்களே என்பதில் ஐயமில்லையன்றோ?

இவ்வாறாகச் சைவசித்தாந்தத்தின் உயர்மன்றமும், உச்சமன்றமும் அறுதியிட்டு ஒரே தீர்ப்பினைக் கூறியிருக்கவும், சைவமெய்யன்பர்கள் ஆன்மாவை உயிரென்று குறிப்பிடலாமா! ஆன்மாவை உயிரென்று கொள்பவர்களை அருணந்திசிவன் காய்ந்தவனைக் காண்மின்:

"...... இடரிலா வென்ற னான்மா வென்றபோ தான்மா வேறோ?
திடனதா யுயிரை வேறு கண்டிடார் செப்ப லேகாண்"

இதன் பொருள் என்ன? ஆன்மாவினின்றும் உயிரினை வேறாகக் காணமாட்டாதாருடைய கூற்று இது. நீ இவற்றை வெவ்வேறு பொள்களாகக் கண்டு, ஆன்மாவும் நானும் ஒன்றே என்று நின்று விடு. இதற்கும் மேலே சென்று, பிரமமே நான் என்பையாயின், அளவைகளாற் காணும்போது இடர்ப்பட நேரிடும்' என்பதன்றோ?

இந்த இடத்திற் சைவ மெய்யன்பர்களுக்கு ஓர் ஐயம் எழும். சித்தியார் மூன்றாஞ் சூத்திரத்து முதற்செய்யுளில், "உயிரெனப் படுவ திந்த வுடலின்வே றுளதாய்......" என்றும் இதேபோல வேறுசில இடங்களிலும் ஆன்மாவையே உயிராகக் கொண்டு தனது கூற்றாகவே அருணந்தி சிவன் கூறுவது ஏன் என்பதே இந்த ஐயத்துக்குக் காரணம்.

வெவ்வேறு கொள்கைகளையுடைய மாற்றுச் சமயத்தாரோடு வழக்காற்றி, அவர்களது கொள்கைகளிலுள்ள தவறுகளைக் களைந்து, சைவத்தின் உண்மை நிலையை நிறுத்திக் காட்டுவது சித்தியாரின் நோக்கமாகும். அவ்வாறு வழக்குரைக்கும் போது, 'கடவுளும் இல்லை ஆன்மாவும் இல்லை' என்ற கொள்கையுடைய உலகாயதவிடம் வழக்காடும் போது, சைவன் அவனிடம் கடவுள், ஆன்மா

ஆகியவற்றின் இயல்புகள் குறித்துப் பேசக்கூடாது. 'ஆணவமலம் என்பதாக ஒரு மலமில்லை' என்றும் கொள்கையுடைய புறச்சமயத் தாரோடு வழக்காடும் போது, இதன் இயல்பு குறித்து அவர்களிடம் சைவன் பேசுக்கூடாது. இஃது அளவை நூலிலுள்ள கட்டுப்பாடு ஏனெனில், இல்லாத பொருள்மீது ஆராய்ச்சி யில்லையாதலால் இந்தக் கட்டுப்பாட்டினை மீறுகிற சைவன் எழுவாய் தோன்றாமை (அப்பிரசித்த விசேடியம்) என்னும் தவறுசெய்தவனாகிவிடுவான்

இதனாலேயே, ஆன்மா இல்லை' என்பவர்களுடன் வழக்காடு மிடங்களிலெல்லாம், சித்தியாரில் உயிர் என்ற சொல்லானது ஆகுபெயராக ஆன்மாவைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. மூன்றாஞ் சூத்திரத்து இறுதி யிரண்டு செய்யுள்களிலும் ஆன்மா குறிக்கப்படுவது காண்க.

நினைவிற் கொள்க:

தமிழ்ச்சைவத்தில் ஆன்மா வேறு; உயிர்வேறு. இனி ஆன்மா என்னுஞ்சொல் தமிழ்ச்சொல்லா, அன்று என்பதற்கான விளக்கத்தினை அடுத்துக் காண்போம்.

இருமான வாழ்வுக்கு எளிய வழிகள்

முகத்தில் வண்டுக்கடி போன்றவைக்கு

(1) அம்மான் பச்சரிசி என்ற மூலிகையின் பாலைத் தினமும் காலை வேளையில் கடி உள்ள இடத்தில் தடவி இரண்டு மணி நேரம் இருந்து பயத்தமாவு தேய்த்துக் குளிக்கவும். அதே கீரையைப் பருப்புடன் சமைத்துண்ண முகம் பட்டுபோல் மிருதுவாகும்.

சீதளம் மிகுந்து உண்டாகும் வலி இழுப்புக்கு

(2) திருநீற்றுடன் சிறிது கற்பூரம் கலந்து உடலெல்லாம் தேய்த்து அழுத்திவிடச் சிலவினாடிகளில் நோய் குணமாகும். தினமும் குளித்துத் திருநீறணிந்து இறைவழிபாடு செய்பவர்களுக்கு உடலைப் பற்றிய நோய்கள் யாவும் நீக்குவதுடன் மனமும் பண்பட்டு வளர்ச்சி பெறும். மேலும் துளசியைத் தினமும் உண்டு வருவதால் நோய்கள் யாவும் நீங்கும்.

Dr. N. சடையப்பன் S.M.P.

உ

சிவ சிவ

திருக்கொள்ளம்பூதூரில்

திருநெறிய தேவாரத் திருமுறை இன்னிசை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 21 வது அதிபர் "கயிலைமாமுனிவர்"

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்

அருளாணையின் வண்ணம் நிகழ்த்தப் பெறுவது.

பிரபவ ஆண்டு ஐப்பசித்திங்கள் 5 - ம் நாள்
22 - 10 - 87 வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில்

1 தமிழ்மறை இன்னிசைப் பண்மணி
திரு டி. எம். சபாபதி தேசிகர், திருவாவடுதுறை.

2 தேவார இசைமணி, தேவார இசையரசு, கலைமாமணி
திரு எஸ். முத்துக்கந்தசாமி தேசிகர், திருச்சிராப்பள்ளி.

3 இன்னிசை மாமணி, சங்கீர்த்தனகர தேவார இசைமணி
திரு எஸ். திருஞானசம்பந்தம், சீர்காழி.

4 திரு ப. ராமச்சந்திர ஓதுவார், விருத்தாசலம்.

5 திரு செல்வக்கணபதி ஓதுவார், ஸ்தல ஓதுவார்.

6 திரு வி. தியாகராஜன், திருப்பனந்தாள்.

7 சங்கீதபூஷணம், வேய்ங்குழல் இசைரத்தினம்
திரு எஸ். கோபாலன், சிதம்பரம். வேய்ங்குழல்

பாலகந்தி
திரு எம். ஆர். மாரியப்பன், தில்லையாடி. மிருதங்கம்

இரா. சடகோபன்
நிர்வாக அதிகாரி
ஸ்ரீ வில்வாரண்யேசுவர சுவாமி
தேவஸ்தானம்
திருக்கொள்ளம்பூதூர்

அருளாணையின் வண்ணம்
ஆர். வி. சுப்பிரமணியம்
மேலாளர்
ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்

ஆயுள் சந்தா செலுத்தினல்

ஓர் அன்பளிப்பு

ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு

ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினல்

ரூ. 55 மதிப்புள்ள

கந்தர் கலிவெண்பா

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக
அளிக்கப்பெறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா
பிரபல இசையறிஞர் சேலம்
டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத்
தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ 25-ம்
அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி
இசைத்தட்டைப் பெறலாம்.

தி. ஆ - ர்

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

ஆயுள் சந்தா	(உள்நாடு)	ரூ 125-00
,,	(வெளிநாடு)	ரூ 225-00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)	ரூ 10-00
,,	(ஸ்ரீலங்கா)	ரூ. 13-00
,,	(வெளிநாடு)	ரூ. 15-00

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். "ஸ்ரீகுமரகுருபரர்"
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் தா ம. வெள்ளைவாரணம்.
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Posted at Sub-Post Office at Tirupanandal
612504

Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை—600 090.